விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

## 267வது போப்பாக லியோ தெரிவு



15ஆம் பக்கம் பார்க்க

# வலம்புரி
Valampurii
E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 141 வள்ளுவர் ஆண்டு 2056 சித்திரை 26 வெள்ளிக்கிழமை (09.05.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## நல்லூரைச் சேர்ந்த தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர்

### அநுராதபுரத்தில் நீரில் மூழ்கிப் பலி



(அநுராதபுரம்)

அநுராதபுரம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் நல்லூரைச் சேர்ந்த தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

நேற்று மாலை 6 மணியளவில் இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க

## வடக்கு மக்களின் காணிகளை அரசுடமையாக்க முயற்சி

### சபையில் கஜேந்திரகுமார் எம்.பி.குற்றச்சாட்டு

(கொழும்பு)

வடக்கு மக்களின் காணிகளை அரசுடைமையாக்க முயற்சிகள் மேற் கொள்ளப்படுகின்றது என பாராளு மன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் குற்றம் சுமத்தியுள் ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போது இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரி



16ஆம் பக்கம் பார்க்க

## கசிப்பு, பணம் வழங்கியே

# தமிழரசுக் கட்சி தேர்தலில் வாக்குகளைப் பெற்றது

### சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க குற்றச்சாட்டு

(கொழும்பு)



கசிப்பு மற்றும் பணம் வழங்கியே தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி வாக்குகளைப் பெற்றது என சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

## பாராளுமன்றில் இடையூறு

## வெளியேற்றப்பட்ட அர்ச்சுனா எம்.பி

(கொழும்பு)

பாராளுமன்ற அலுவலகளுக்கு இடையூறு விளைவித்ததாக தெரிவித்து பாராளுமன்ற உறுப் பினர் அர்ச்சுனா இராமநாதன் சபை நடவடிக் கையிலிருந்து வெளியேற்றப்பட்டார்.

நேற்று பாராளுமன்றத்

15ஆம் பக்கம் பார்க்க

## அராலியில் உழவு இயந்திரத்தின்

## சக்கரத்தினுள் அகப்பட்ட இளம் குடும்பஸ்தர் பலி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - அராலிப் பகுதியில் உழவு இயந் திரத்தின் சக்கரத்தினுள் சிக்குண்டு இளம் குடும் பஸ்தர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

இதில் அராலி மேற்கு, வட்டுக்கோட்டைப் பகுதி யைச் சேர்ந்த 38 வயதுடைய பத்மநாதன் தனீஸ்வரன்

15ஆம் பக்கம் பார்க்க

## ஜூன் 2க்கு முன் மேயர்களை நியமிக்குக பெண் பிரதிநிதிகளை உறுதிப்படுத்துக

### தேர்தல்கள் ஆணைக்குழு

(கொழும்பு)

ஜூன் 2ஆம் திகதிக்கு முன்னர் உள்ளூராட்சி மன்றங் களுக்கான மேயர்களை நிய மிக்குமாறு அறிவுறுத்தியுள்ள தேர்தல்கள் ஆணைக்குழு வின் தலைவர் ஆர்.எம்.ஏ. எல்.ரத்நாயக்க பெண் பிரதி நிதிகளின் எண்ணிக்கையை யும் உறுதிப்படுத்துமாறு அறி வுறுத்தியுள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்று கருத்து வெளியிடும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக் கையில்,

"உள்ளூராட்சி மன்றங் களில் 50%க்கும் மேற்பட்ட இடங்களைப் பெற்ற தொடர் புடைய அரசியல் கட்சிகள் மற் றும் சுயேட்சைக் குழுக்க ளுக்கு வரும் நாட்களில் தவி சாளர்கள், மேயர்கள், தலை

15ஆம் பக்கம் பார்க்க

## தோட்டத்தில் மிளகாய் பறித்துக் கொண்டிருந்தவேளை

## மின்னல் தாக்கியதில் ஏழாலையில் இளைஞன் பலி

(யாழ்ப்பாணம்)

ஏழாலையில் உள்ள தோட்டத்தில் மிள காய் பறித்துக் கொண்டிருந்தவேளை மின்னல் தாக்கியதில் இளைஞன் ஒருவர் உயிரிழந் துள்ளார்.

நேற்று நண்பகல் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.



15ஆம் பக்கம் பார்க்க

## நீர்வேலியில்

## 7 நாட்களேயான சிசு மரணம்

(யாழ்ப்பாணம்)

நீர்வேலியில் பிறந்து ஏழு நாட்களேயான இரட்டை சிசுக் களில் ஒரு சிசு நேற்று முன் தினம் புதன்கிழமை உயிரி ழந்துள்ளது.

நீர்வேலியைச் சேர்ந்த தம் பதியினருக்கு நிறை குறைந்த நிலையில் இரட்டைப் பெண்

15ஆம் பக்கம் பார்க்க

## வயிற்றுக்குத்து: துன்னாலையில் 3 வயதுக் குழந்தை மரணம்

### உடற்கூற்று மாதிரி கொழும்புக்கு அனுப்பி வைப்பு

(கரணவாய்)

வயிற்றுக்குத்துக் காரண மாக துன்னாலையில் 3 வயது ஆண் குழந்தை ஒன்று நேற்று மரணமடைந்துள்ளது.

துன்னாலை தெற்கு குட வத்தையைச் சேர்ந்த விதுசாந் தன் துஷாத் (வயது-3) என்ற குழந்தையே உயிரிழந்துள்ளது.

கடந்த மாதம் 28ஆம் திகதி குழந்தைக்கு வயிற்றோட்டம் ஏற்பட்ட நிலையில் பருத்தித் துறை ஆதார வைத்தியசாலை யில் சிகிச்சை பெறப்பட்டுள் ளது.

பின்னர் 4ஆம் திகதி வயிற்றுக்குத்து ஏற்பட்டு

15ஆம் பக்கம் பார்க்க

## உலக வங்கித் தலைவர்

### பிரதமருடன் கலந்துரையாடல்



(கொழும்பு)

பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய மற்றும் உலக வங்கி குழுமத் தலைவர் அஜய் பங்கா ஆகியோ ருக்கு இடையில் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

பிரதமர் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இந்த

15ஆம் பக்கம் பார்க்க

# சாவகச்சேரி நகராட்சி மன்றம்

## பிரதேச அபிவிருத்தி உதவித் திட்டத்தின் கீழ் சாவகச்சேரி நகராட்சி மன்றத்தினால் அமைக்கப்பட்ட கடைகளை நீண்ட கால குத்தகைக்கு வழங்குவதற்கான பகிரங்க மீள்கேள்வி மனு கோரலுக்கான அறிவித்தல் - 2025

கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி :- 09.05.2025 தொடக்கம் 22.05.2025 பிற்பகல் 2.00 மணிவரை (அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்)

கேள்விப்பத்திரம் ஏற்கும் கடைசி திகதி :- 23.05.2025 ஆம் திகதி மு.ப.10.00 மணி

கேள்விப்பத்திரம் திறக்கும் திகதி :- 23.05.2025 ஆம் திகதி மு.ப.10.00 மணி

கேள்வி திறக்கப்படும் இடம் :- நகராட்சி மன்ற அலுவலகம் சாவகச்சேரி.

**கேள்வி அட்டவணை**

பஸ் நிலையத்திற்கு அருகாமையிலுள்ள கடைத்தொகுதி (மேல்மாடி)

| கடை இலக்கம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (இதரவரிகள் தவிர) | மாத வாடகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (மீளளிக்கமுடியாதது) |
|---|---|---|---|---|
| LDSP/BT4/03 | ரூபா 2,160,000.00 | ரூபா 9,000.00 | ரூபா 32,400.00 | ரூபா. 2,000.00 |

சந்தையின் உட்பகுதியில் அமைந்துள்ள கடைத்தொகுதி

| கடை இலக்கம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (இதரவரிகள் தவிர) | மாத வாடகை | கேள்வி வைப்புப்பணம் (மீளளிக்கக்கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (மீளளிக்கமுடியாதது) |
|---|---|---|---|---|
| LDSP/PT3/06 | ரூபா 11,277,000.00 | ரூபா 9,000.00 | ரூபா 169,155.00 | ரூபா. 2,000.00 |

**நிபந்தனைகள்**

1. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
2. கேள்விப்படிவம் பெற விரும்புவோர் கோரிக்கைக் கடிதத்துடன் தமது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்காக தே.அ.அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடனும் அதன் பிரதியுடனும் சமூகமளிக்க வேண்டும்.
3. கேள்விப்படிவம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியினை "செயலாளர், நகரசபை. சாவகச்சேரி" எனும் முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயரை தெளிவாக குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடுதல் வேண்டும். இரண்டாவது பிரதி "பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு 23ஆம் திகதி மு.ப 10:00 மணிக்கு முன்னதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.
4. ஒருவர் ஒரு கடைக்கு ஒரு விண்ணப்ப படிவம் மாத்திரம் சமர்ப்பிக்க முடியும் என்பதுடன் சித்திபெறும் ஒரு விண்ணப்பதாரிக்கு ஒரு கடை மாத்திரமே வழங்கப்படும். அத்துடன் ஏற்கனவே நகரசபையின் கடைகளை நீண்ட கால குத்தகைக்கு பெற்றவர்கள் விண்ணப்பிக்க முடியாது.
5. கடைகளுக்குரிய மாதாந்த வாடகையாக விலைமதிப்பீட்டு திணைக்களத்தினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்த வேண்டும்.
6. குறித்த கடையினை ஒப்பந்ததாரர் எந்தவகையிலும் உப வாடகைக்கு கொடுக்கவோ உரிமை மாற்றம் செய்யவோ முடியாது.
7. குறித்த கடைகளில் சகிக்க முடியாத தொழில்கள் மற்றும் அபாயகரமான தொழில்கள் ஆகிய வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடமுடியாது.
8. சித்திகர கேள்விதாரராக தெரிவு செய்யப்படுபவர் கேள்வித்தொகையை முழுமையாக செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொண்டு நகராட்சி மன்றத்துடன் ஒப்பந்தத்தினை செய்து கொள்ள வேண்டும்.
9. சித்திகர கேள்விதாரர் நகர சபையுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தில் குறிப்பிடப்படும் விதிமுறைகளுக்கிணங்க நடந்து கொள்ளல் வேண்டும்.
10. சித்திகர கேள்விதாரர் 03 மாத கால வாடகையினை பாதுகாப்பு வைப்பு பணமாக செலுத்த வேண்டும்.
11. சபையால் தீர்மானிக்கப்படும் வியாபார வரி, வியாபார உரிம கட்டணத்தினை வருடாந்தம் செலுத்துவதுடன் வியாபார உரிமத்திற்குரிய கடைகள் வியாபார உரிமத்தினை பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
12. கேள்வி பத்திரத்தினை ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் சபையின் செயலாளருக்கு உண்டு.
13. மேலதிக விபரங்களை நகராட்சி மன்ற அலுவலகத்தில் கடமை நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

செயலாளர்,
நகராட்சிமன்றம்,
சாவகச்சேரி.

(C-2929) 09.05.2025

# வவுனியாவில் பெண் சடலமாக மீட்பு

வவுனியாவில் இளம் பெண்ணொருவர் நேற்று முன்தினம் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதில் வவுனியா இராசேந்திரம் குளத்தைச் சேர்ந்த தவகுலசிங்கம் திவ்யா (வயது -24) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

குறித்த விடயம் தொடர்பில் மேலும் தெரியவருகையில் குறித்த பெண் நீண்ட நேரமாக அவரது வீட்டு அறையில் அமைதியாக இருந்தமையினையடுத்து வீட்டார் அறையின் கதவினைத் திறந்து பார்த்த சமயத்தில் வீட்டின் கூரையின் மேற்பகுதியில் துணியின் மூலம் தூங்கில் தொங்கிய நிலையில் சடலமாக காணப்பட்டார். இதுதொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

# அந்தியேட்டி ஆத்மசாந்தி வழிபாட்டு அழைப்பு



கடந்த 09.04.2025 புதன்கிழமை அன்று இலுப்பையடி ஞானவைரவர் பாதங்களில் சரணடைந்த எமது குடும்பத் தெய்வம்

## அமரர் நாகமுத்து கதிர்காமத்தம்பி

(ஓய்வுபெற்ற காங்கேசன்துறை சீமெந்து கூட்டுத்தாபன இயந்திர இயக்குனர்)

மலர்வு 14.11.1946 உதிர்வு 09.04.2025

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 09.05.2025 வெள்ளிக்கிழமை காலை 5.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்று வீட்டுக்கிரியைகள் நடைபெறும். ஆத்மசாந்தி வழிபாடும் மதிய போசன நிகழ்வும் எதிர்வரும் 13.05.2025 செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் பன்னாலை வரத்தலம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

இளவாலை வடக்கு,
இளவாலை.

(C-2925)

தகவல்:
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

தோற்றம் 08 - 01 - 1994



மறைவு 07 - 05 - 2025

## சிவஞானம் நிலக்சன்

நவாலி கிழக்கு மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவஞானம் நிலக்சன் அவர்கள் 07.05.2025 அன்று காலமானார்.

அன்னார் சிவஞானம்(திருவடிநிலை சைவப் பிரகாச வித்தியாசாலை - அதிபர்) - அம்பிகை(யா/இராமநாதன் கல்லூரி - அதிபர்) தம்பதியினரின் அன்பு மகனும் கோபிநாத்(UK), கியானி (சிங்கப்பூர்), துளசினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் நிலானி அவர்களின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 09.05.2025 வெள்ளிக்கிழமை அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 10.00 மணியளவில் கொத்துக்கட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நவாலி கிழக்கு,
மானிப்பாய்.

(1114)

தகவல் :
குடும்பத்தினர்

# இலங்கையின் அபிவிருத்திக்கு உதவ உலக வங்கி இணக்கம்

## மூன்று வருடங்களுக்குள் I பில்லியன் டொலர் நிதி

(கொழும்பு)

**இலங்கையின் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு கைகொடுக்க உலக வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது.**



இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள உலக வங்கியின் தலைவர் அஜய் பங்கா மற்றும் ஜனாதிபதி அநுரகுமார ஆகியோருக்கு இடையில் மேற்கொள்ளப்பட்ட சந்திப்பின் போது இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மாலை ஜனாதிபதி மாளிகையில் குறித்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

அதன் போது எதிர்வரும் மூன்று ஆண்டுகளுக்குள் ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியை இலங்கைக்கு வழங்க உலக வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது.

கூடுதல் தொழில்வாய்ப்புகளை உருவாக்கக்கூடிய மின்சாரம், சுற்றுலாத்துறை, கமத்தொழில் மற்றும் பிராந்திய அபிவிருத்தி போன்ற செயற்பாடுகளுக்கு இந்த நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

இந்த நிலையில், உலக வங்கி குழுமத்தின் இந்த ஆதரவு இலங்கை மக்களுக்கான முதலீடாகும் என்று ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தெரிவித்தார்.

அதேவேளை, இலங்கையின் முன்னேற்றத்தை கட்டியெழுப்ப இப்போதே செயற்படுவதன் முக்கியத்துவத்தை உலக வங்கி குழுமத் தலைவர் அஜய் பங்கா எடுத்துரைத்துள்ளார். (நி-8)

# வெசாக்கை முன்னிட்டு மூடப்படும் மதுபானக் கடைகள்

(கொழும்பு)

வெசாக் பண்டிகையை முன்னிட்டு மதுபான விற்பனை நிலையங்கள் மூடப்படும் என்று கலால் திணைக்களம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

அதன்படி, மே 12 முதல் மே 14 வரை 3 நாட்களுக்கு மதுபானக் கடைகள் மூடப்படும் என்று கலால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அந்தவகையில், மே 11 ஆம் திகதி இரவு முதல் மே 15 ஆம் திகதி திட்டமிடப்பட்ட திறப்பு நேரம் வரை அனைத்து மதுபானக் கடைகளும் மூடப்பட வேண்டும் என்று கலால் திணைக்கள ஆணையர் ஜெனரல் உதய குமார பெரேரா தெரிவித்தார். (நி-8)

# பாராளுமன்ற உறுப்பினராக சமந்த ரணசிங்க பதவிப் பிரமாணம்

(கொழும்பு)

காலமான கோசல நுவான் ஜயவீரவால் வெற்றிடமான தேசிய மக்கள் சக்தியின் கேகாலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு பாராளுமன்ற உறுப்பினராக சமந்த ரணசிங்க, சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன முன்னிலையில் நேற்றுப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

காலமான கோசல நுவான் ஜயவீரவால் வெற்றிடமான தேசிய மக்கள் சக்தியின் கேகாலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு சமந்த ரணசிங்க நியமிக்கப்பட்டார்.

சமந்த ரணசிங்க 2024 பாராளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் ரம்புக்கனை தேர்தல் அமைப்பாளராகப் பணியாற்றியிருந்தார். (நி-8)

# பகிடிவதை சம்பவங்கள் தொடர்பில் அலட்சியம் காண்பித்த அதிகாரிகள்

## இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் கண்டனம்

(கொழும்பு)

அண்மைய காலத்தில் பதிவான சில பகிடிவதைச் சம்பவங்கள் உரிய கல்விக் கட்டமைப்புக்களின் அதிகாரிகளின் அலட்சியத்தினால் நடைபெற்றிருப்பதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

பகிடிவதைச் சம்பவங்கள் தொடர்பில் அவ்வதிகாரிகளும். பொறுப்புக்கூறலுக்கு உட்படுத்தப்படவேண்டும் என சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

மிகமோசமானதும் மனிதத்தன்மையற்றதுமான பகிடிவதையின் காரணமாக சப்ரகமுவ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவன் ஒருவன் தற்கொலை செய்து கொண்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் நாம் மிகுந்த கவலையடைகின்றோம்.

எந்தவொரு கல்வியியல் கட்டமைப்புக்களிலும் எந்தவொரு மாணவருக்கு எதிராகவும் பகிடிவதை மற்றும் வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்படுவதை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

அது நாட்டின் சட்டத்தை மாத்திரமன்றி அடிப்படை மனிதாபிமானக் கோட்பாடுகளையும் மீறுகின்ற செயலாகும்.

அதேபோன்று 1998 ஆம் ஆண்டு 20 ஆம் இலக்க கல்விக்கட்டமைப்புக்களில் பகிடிவதை மற்றும் ஏனைய வன்முறைத் தடுப்புச்சட்டத்தின் சரத்துக்கள் சம்பந்தப்பட்ட தரப்பினரால் உரியவாறு நடைமுறைப்படுத்தப்படாமை குறித்து நாம் தீவிர கரிசனை கொண்டிருக்கிறோம்.

இவ்வாறான சட்டவிரோத பகிடிவதைச் செயற்பாடுகளை முடிவுக்குக்கொண்டு வருவதற்கு அவசியமான நடவடிக்கைகளைப் பல்கலைக்கழகங்கள் மற்றும் ஏனைய உயர் கல்விக் கட்டமைப்புக்களின் அதிகாரிகள் முன்னெடுக்க வேண்டும் என சுட்டிக்காட்டியுள்ளனர். (நி-8)

# ரணில் விக்கிரமசிங்க இந்தியா விஜயம்

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்தியாவுக்கான மூன்று நாள் விஜயமொன்றை மேற்கொண்டு புறப்பட்டுச் சென்றுள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியைத் தழுவிய பின்னர் ரணில் விக்ரமசிங்க இதுவரை நான்கு தடவைகள் இந்தியாவுக்கான விஜயங்களை மேற்கொண்டுள்ளார்.

இந்தியாவின் முக்கிய பத்திரிகையின் ஏற்பாட்டில், கர்நாடக மாநிலத்தில் நடைபெறும் நிகழ்வொன்றில் பிரதான சொற்பொழிவை ஆற்றுவதற்கான அழைப்பின் பேரிலேயே அவர் இந்தியாவுக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ளார். (நி-8)



# இலங்கையிலிருந்து லாகூர் செல்லும் விமான சேவைகள் இரத்து

(கொழும்பு)

பாதுகாப்பு காரணங்களுக்காக இலங்கையிலிருந்து பாகிஸ்தானின் லாகூருக்குச் செல்லும் அனைத்து விமானங்களும் மறு அறிவிப்பு வரும் வரை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் அறிவித்துள்ளது.

இதேவேளை நேற்றுக் காலை பாகிஸ்தானின் லாகூரில் தொடர்ச்சியான பலத்த வெடிச்சத்தங்கள் கேட்டதால், சைரன்கள் ஒலித்தன, மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியே ஓடினர் என்று பாகிஸ்தானிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

26 பேர் கொல்லப்பட்ட பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலுக்கு பதிலடியாக, 'ஆப்ரேஷன் சிந்தூர்' என்ற நடவடிக்கையில் பாகிஸ்தானில் உள்ள பயங்கரவாத முகாம்களை இந்தியா தாக்கிய ஒரு நாளுக்குப் பின்னர் இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

இதனால் சியால்கோட், கராச்சி மற்றும் லாகூர் விமான நிலையங்களில் விமான நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக அந் நாட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி-8)

# எல்லையில் பதற்றம் போட்டி பாதியில் நிறுத்தம்

## இரசிகர்கள் பத்திரமாக வெளியேற்றம்



பஞ்சாப் - டில்லி அணிகள் மோதிய பிரீமியர் லீக் போட்டி போர் பதற்றம் காரணமாக பாதியில் நிறுத்தப்பட்டது.

தரமசாலாவில் உள்ள ஹிமாச்சல பிரதேச கிரிக்கெட் சங்க மைதானத்தில் நடந்த பிரீமியர் லீக் போட்டியில் பஞ்சாப் - டில்லி அணிகள் மோதின. மழையால், ஒரு மணி நேரம் தாமதமாக போட்டி தொடங்கியது. ஓவர் குறைக்கப் படவில்லை.

நாணயச்சுழற்சியில் வென்ற பஞ்சாப் அணித் தலைவர் ஷ்ரேயஸ் பந்துவீச்சைத் தேர்வு செய்தார்.

**நல்ல ஆரம்பம்**

பஞ்சாப் அணிக்கு பிரியான்ஷ் ஆர்யா, பிரப்சிம்ரன் சிங் நல்ல ஆரம்பம் கொடுத்தனர். ஸ்டார்க் வீசிய முதல் ஓவரில் 2 பவுண்டரிகள் விளாசினார் ஆர்யா. இவருக்கு ஒத்துழைப்பு தந்த பிரப்சிம்ரன், ஸ்டார்க் வீசிய 3வது ஓவரில் 3 பவுண்டரிகள் விரட்டினார்.

தொடர்ந்து அசத்திய ஆர்யா, துஷ்மந்தா சமீர பந்தில் 2 சிக்சர்கள், ஒரு பவுண்டரி அடித்தார். பஞ்சாப் அணி 4 ஓவர்களில், 50 ஓட்டங்களை எட்டியது. இந்த சீசனில் தனது முதல் ஓவரை வீசிய தமிழகத்தின் நடராஜன், 4 ஓட்டங்கள் மட்டும் விட்டுக்கொடுத்தார். "பவர்-பிளே" ஓவரின் முடிவில் பஞ்சாப் அணி 69/0 ஓட்டங்களை எடுத்திருந்தது.

**ஆர்யா அசத்தல்:**

அணித் தலைவர் அக்சர் படேல் பந்தை சிக்சருக்கு அனுப்பிய ஆர்யா, 25 பந்துகளில் அரைச்சதம் எட்டினார். இவருக்கு ஒத்துழைப்பு தந்த பிரப்சிம்ரன், மாதவ் திவாரி வீசிய 9வது ஓவர்களில் 2 பவுண்டரிகள் அடித்தார். அபாரமாக ஆடிய ஆர்யா, குல்தீப் யாதவ் வீசிய 10வது ஓவரில் 2 சிக்சர்கள் பறக்கவிட்டார். பொறுப்பாக ஆடிய பிரப்சிம்ரன், 28 பந்துகளில் அரைச்சதம் எட்டினார். இவர்களை பிரிக்க முடியாமல் டில்லி அணி பந்துவீச்சாளர்கள் திணறினர்.

**பாதியில் நிறுத்தம்:**

முதல் விக்கெட்டுக்காக 122 ஓட்டங்களைச் சேர்த்த போது நடராஜன் "வேகத்தில்" ஆர்யா (70 ஓட்., 6 சிக்சர்கள், 5 பவுண்டரிகள்) வெளியேறினார். பஞ்சாப் அணி 10.1 ஓவர்களில், ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 122 ஓட்டங்களை எடுத்திருந்த போது மைதானத்தில் இருந்த மின்கோபுர விளக்கு பழுதடைந்தது.

இதனால் போட்டி நிறுத்திவைக்கப்பட்டது. சிறிது நேரத்தில் மற்ற மின்கோபுர விளக்குகள் அணைக்கப்பட்டன. பிரப்சிம்ரன் (50) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

**காரணம் என்ன:**

இந்நிலையில் போட்டி பாதியில் ரத்து செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இதற்கான காரணம் தெரியவந்துள்ளது. இந்திய எல்லைப்பகுதியில் பதற்றமான சூழ்நிலை நிலவி வருகிறது. ஜம்மு - காஷ்மீர், ராஜஸ்தான், பஞ்சாப் மாநிலங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டது. இதனையடுத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக பாதுகாப்பு காரணங்களுக்காக போட்டி பாதியில் நிறுத்தப்பட்டது. ரசிகர்கள், இரு அணி வீரர்கள் மைதானத்தை விட்டு பத்திரமாக வெளியேற்றப்பட்டனர். மீதமுள்ள போட்டிகளை நடத்துவது குறித்து பி.சி.சி.ஐ., ஆலோசனை நடத்தி வருகிறது.

## கண்ணீர் அஞ்சலி



நல்லூர் பிரதேச செயலகத்தில்
கிராம அபிவிருத்தி
உத்தியோகத்தராகக் கடமையாற்றும்
**திருமதி வேணுகானன் ஜனனி**
அவர்களின் அன்புத் தாயார்

**அமரர் யோகாம்பிகை சபாரத்தினம்**

அவர்கள் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவருடைய ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**யாழ்.மாவட்ட கிராம அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர்கள் நலன்புரிச் சங்கம்**

# இன்றைய ஆட்டங்கள்




# INVITATION FOR BID 2025 STAGE II

## VALIKAMAM NORTH PRADESHIYA SABHA, KANKESANTHURAI(Kollankaladdy)

1. The Chairman, Divisional Procurement Committee on behalf of the **Secretary, Valikamam North Pradeshiya Sabha,Kankesanthurai(Kollankalady)** now invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of building construction for grade mentioned in the table below.
**"Bidders shall also register themselves with the Registrar of Public Contracts, Sri Lanka, in terms of the public Contract Act No 03. of 1987.**
4. Qualification' requirements are indicated in section **4 of the Procurement document.** Additional details are provided in the Bidding Data & Contract Data (Section 5) for SBD 1 Documents (Works specified as group B in Table below)
5. Interested bidders may obtain further information from **address given below in 6** and inspect the bidding docume nts at the same place on any working days from **2025.05.09 To 2025.05.23** in between 09:00 hrs and 15:00 hrs.
6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Secretary, Valikamam North Pradeshiya Sabha, Kankesanthurai(Kollankalady) T.P:021 224 1130, Fax:021 224 3688) from 09:00 hrs to 15:00 hrs.** during the period from 2025.05.09 To 2025.05.23 upon payment of non-refundable fees as mentioned in the table. The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Divisional Procurement Committee, Valikamam North Pradeshiya Sabha, Kankesanthurai(Kollankalady)** on or **before 10.30 a.m at 2025.05.26** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
8. Pre-Bid Conference will be held at **Conference Hall, Valikamam North Pradeshiya Sabha, Kankesanthurai(Kollankalady).** commencing at **02.30 PM on 2025.05.20**
9. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | Document Issuing/Purchasing Period | | | From 2025-05-09 To 2025-05-23 | | | | |
| | Pre-Bid Conference | | | 2025-05-20 at 02.30 PM | | | | |
| | Closing and Opening of Bids | | | 2025-05-26 at 10.30 AM | | | | |
| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | | Bid Validity Period |
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| NP/14/41/(14)/ 05/02/425/CF-18/2025 | Construction of Public Library Building at Alaveddy, Jaffna. | 21.20 | 180 | C6 or above (Building) | 3,500.00 | 212,000.00 | 08/09/2025 | 11/08/2025 |

Chairman, Divisional Procurement Committee,
Valikamam North PradeshiyaSabha, Kankesanthurai (Kollankaladdy).
09.05.2025

(C-2927)

## வடக்கு, கிழக்கில் காணி சுவீகரிப்பு; வர்த்தமானியின் உள்நோக்கம் தெளிவுபடுத்தப்பட வேண்டும்

### சிறீதரன் எம்.பி வலியுறுத்து

(கொழும்பு)

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள 5700 ஏக்கருக்கும் அதிகமான தமிழர்களின் பூர்வீக நிலங்களை சுவீகரிப்பதற்காக 2025.03.28 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலின் உள்நோக்கம் என்ன என்பதை, கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப் பாசன அமைச்சர் கே.டி. லால்காந்த சபைக்கு பகிரங்கமாக அறிவிக்க வேண்டுமென, பாராளுமன்ற உறுப்பினர், சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற சபை அமர்வில், பாராளுமன்ற நிலையியற் கட்டளை 27.2 இன் கீழ், பாராளுமன்றக் குழுத் தலைவராக, துறைசார் அமைச்சரிடம் வாய்மொழி மூல விடைக்கான வினாக்களை முன்வைக்கும் போதே அவர் இவ்விடயம் குறித்து கேள்வி எழுப்பியுள்ளார்.

இதன்போது அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நீண்டகாலம் நடைபெற்ற யுத்தம் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்து, உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும், உறவினர் - நண்பர்களின் வீடுகளிலும் வாழும் போது அவர்களது காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்காமல், மக்களின் காணிகளை சுவீகரிக்கும் இந்த வர்த்தமானி அறிவித்தலின் உள்நோக்கம் என்ன என்பதையும், தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நீண்டகால யுத்தம் காரணமாக அவர்களது காணி ஆவணங்கள் தவறவிடப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலகங்கள் தெரிவிக்கும் நிலையில், இப்புதிய வர்த்தமானி அறிவித்தல் மூலம் காணி உரிமையை உறுதிப்படுத்துமாறு எவ்வாறு கோர முடியும் என்பதையும் அமைச்சர் இந்த உயரிய சபைக்கு அறிவிக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார். (நி-8)

## தலசீமியா நோயால் பாதிக்கப்படும் குழந்தைகள் அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் 2,000 முதல் 2,500 குழந்தைகள் தலசீமியா நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாகச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் பிறக்கும் 40 முதல் 50 வரையிலான குழந்தைகள் தலசீமியா நோயினால் பாதிக்கப்படுவதாக அமைச்சின் தொற்று அல்லாத நோய்கள் பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் நிபுணர் சமிதி சமரகோன் தெரிவித்தார்.

உலக தலசீமியா தினத்தை முன்னிட்டு நடைபெற்ற ஊடக சந்திப்பில் பேசிய வைத்தியர் சமிதி சமரகோன் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த ஆண்டு தலசீமியா தினம் "தலசீமியாவுடன் சமூகங்களை ஒன்றிணைத்தல், நோயாளிகளுக்கு முன்னுரிமை அளித்தல்" என்ற கருப்பொருளின் கீழ் கொண்டாடப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-8)


## இதய ஆராதனைகள்



நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்



ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாததேசிக ஞானசம்பந்த பராமாச்சாரிய சுவாமிகள் (1வது குருமகாசந்நிதானம்)

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பராமாச்சாரிய சுவாமிகள் (2வது குருமகாசந்நிதானம்)

- பெருமைமிகு பொலிகண்டி கைலாசநாதர் சிவன் ஆலயத்தில் வரலாற்றுச் சிறப்பு மிக்க சமயச் சொற்பொழிவாற்றிய நல்லை ஆதீன முதலாவது குருமகாசந்நிதானம். (மணிபாகவதர் ஐயா) 1966-1974 காலப் பகுதிகளில்
- பெருமைமிகு பொலிகண்டி அருளாளர் அமரர். வ.சிவசுவாமி ஆசிரியர் மூலம் தீமிதிப்பு-தீக்குளிப்பு வழி பிணிபோக்கிய பொலிகண்டி மருதாம்புலம் பத்திரகாளி அம்பாள்-திருக்குட முழுக்கு விழாவில் கலந்து சிறப்பித்து அருளுரை நல்கிய நல்லைஆதீன இரண்டாவது குருமகா சந்நிதானம்-2024
- " காஞ்சிமாவடி வைகுஞ்செவ்வேள்"- "கற்பூரக் கந்தன்" ஆலயத்தில் "சங்குநாதம்"-"சேமக்கல ஒலி" இன் பெருமை, முக்கியத்துவம் குறித்து இந்திரமயிலின் மீதமர்ந்த உலகப் பெரும் சண்முகப் பெருமானின் மஹோற்சவ -இரதோற்சவ(கட்டுத்தேர்) தினத்தன்று கலந்து சிறப்பித்து அருளுரை வழங்கிய நல்லை ஆதீன இரண்டாவது குருமகாசந்நிதானம்-2018

2வது குருமகாசந்நிதானத்தின் தேகவியோக நிகழ்விலும்
செம்மணி நோக்கிய இறுதி யாத்திரையிலும்
பங்குபற்ற முடியாமையையிட்டு....மனவேதனையுடன்.

(1113)

சிவன்கோவிலடி, பொலிகண்டி வல்வெட்டித்துறை. (09.05.2025) நம்பிக்கைப் பொறுப்பாளர், "ஜோதி ஆச்சிரமம்"



## குருவருளை வேண்டி பிரார்த்திக்கின்றோம்



சைவத்திற்கும் தமிழுக்கும் அளப்பரிய தொண்டுகள் ஆற்றி ,1.5.2025 வியாழக்கிழமை தில்லைக்கூத்தன் திருவடிகளில் பரிபூரணமடைந்த நல்லை ஆதீனமுதல்வர்

**ஸ்ரீலஸ்ரீ.சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்**

பாதகமலங்களை பணிந்து,சுவாமிகள் குருவருளை வேண்டி பிராத்திக்கின்றோம்.

குருவே துணை

(4127)

உப தலைவர், நிர்வாக உறுப்பினர்கள்
மகாதேவ ஆச்சிரமம், கிளிநொச்சி


## இராசிபலன்

09.05.2025,
சித்திரை 26, வெள்ளிக்கிழமை
துவாதசி பிற்கல்-4.40 மணிவரை

அத்தம் பின்னிரவு 1.34 மணி வரை
சுபநேரம்5.54-7.24ணிவரை
இராகுகாலம் 10.24.-11.54மணிவரை

அமிர்தசித்தம்
சந்திராஷ்டமம்-
சதயம் ,பூரட்டாதி

வளவன்




நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, மறைமுக எதிர்ப்புகள் மாறும், குடும்ப மகிழ்ச்சி கூடும்.




பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், அரசு வழியில் அனுகூலமுண்டு, கல்யாணக் கனவுகள் நனவாகலாம்.




தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், பணவரவு திருப்தி தரும், வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும்.




வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், பொது நல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், நிதி நிலை உயரும் நாள்.




ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, குடும்ப மகிழ்ச்சி கூடும், சான்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம், பேச்சில் இனிமை தென்படும்.




குடும்பத்தினரிடையே ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள்.




காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், புண்ணிய காரியங்களுக்கு செலவு செய்து மகிழ்வீர்கள், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம், வழிபாட்டில் ஆர்வம் கூடும்.




இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.




வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கை கூடும், வழிபாட்டில் ஆர்வம் கூடும், கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், போசன சுகமுண்டு.




ஏட்டிக்குப் போட்டியாகசச் செயற்பட்டவர்கள் மனம் மாறுவார், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் முன்னேற்றமுண்டு.




கடவுளை வழிபட்டுக் காரியங்களைத் தொடங்க வேண்டிய நாள், மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.




வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் வாய்ப்புண்டு, ஆன்மீகச் சிந்தனை மேலோங்கும் நாள், சொந்த பந்தங்களின் சந்திப்புகள் இடம் பெறலாம், போசன சுகமுண்டு.

அறிவு தலைக் கிரீடம், அடக்கம் காலுக்குச் செருப்பு.

# யாழ்.புகையிரத நிலையத்தில் குடிநீர் இயந்திரம் திறந்து வைப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்குவதற்கான இயந்திரம் புனரமைத்து நேற்று திறந்து வைக்கப்பட்டது.

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் 72ஆவது ஆண்டு பழைய மாணவர்களால் நடத்தப் படும் தண்ணீர் MHC 72 செயற்றிட்டத்தின் திறப்பு விழா நிகழ்வில் யாழ்ப்பாண புகையிரத நிலைய பொறுப்பதிகாரி பிரதீபன், தன்னார்வத் தொண்டு நிறுவனத்தினர், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

யாழ்ப்பாணம் புகையிரத நிலையம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் குடிநீர் சவர்த்தன்மைமிக்கதாக காணப்படும் நிலையில் குறித்த இயந்திரத்தால் புகையிரத நிலையத்திற்கு வருபவர்களும் புகையிரத நிலையத்திற்கு அருகில் வசிப்பவர்களும் பயன் பெறுவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (6-8)

## நினைவேந்தலும் நூல் அறிமுகமும்

(யாழ்ப்பாணம்)

ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் நடத்தும் பண்டிதர் ம.ந.கடம்பேசுவரின் நினைவு நிகழ்வும் நூல்கள் அறிமுகமும் நாளை சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு யா/வட்டு இந்துக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

வட மாகாண கல்விப் பணிப்பாளரும் ஆரிய திராவிட பாஷாபிவிருத்தி சங்கத் தலைவருமான க.பிரட்லி ஜெனாட் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா, சிறப்பு விருந்தினராக வட மாகாண முன்னாள் பிரதம செயலாளர் இ.இளங்கோவன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். சங்கத்தின் செயலாளர் பண்டிதர் சியாமினி தவபாலன் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கவுள்ளார். (6-8)

# மக்கள் ஆணைக்கு தலைவணங்குகிறோம்

## சிறீதரன் எம்.பி



(தருமபுரம்)

நடைபெற்று முடிந்த உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலில் தமிழ்த்தேசியப் பயணத்தை ஏற்று இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிக்கு மக்கள் வழங்கிய ஆணைக்கு தலைவணங்குகிறேன் எனப் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் மூன்று சபைகளிலும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட வேட்பாளர்களுடனான சந்திப்பு, கட்சியின் மாவட்டப் பணிமனையில் நேற்று முன்தினம் நடைபெற்ற போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இதன்போது மேலும் தெரிவித்ததாவது,

அண்மைய தேர்தல்களைக் காட்டிலும் இந்தத் தேர்தலில் தமிழ்த்தேசியக் கட்சிகளுக்கு எமது மக்கள் வாக்குகளால் வலுச்சேர்த்திருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்தில் எமது கட்சிக்கு வாக்களித்து கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய சபைகளில் நாம் ஆட்சியமைக்க காரணமாக இருந்த மக்களுக்கு எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். மக்களின் ஆணைக்கு மதிப்பளித்து அவர்களின் மன உணர்வுகளோடு இணைந்த வகையில் எமது தமிழ்த் தேசிய அரசியற் பயணம் தொடரும் எனத் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் கலந்து கொண்ட வேட்பாளர்கள், கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்திலும் புனித திரேசாள் தேவாலயத்திலும் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளையால் ஒழுங்கமைக்கப்பட்ட மத வழிபாட்டு ஆராதனைகளிலும் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8-316)

# மக்களின் தேவைகளை நிச்சயம் நிறைவேற்றுவோம்

## அமைச்சர் சந்திரசேகர்

(யாழ்ப்பாணம்)

"தமிழ் மக்கள் தேசிய மக்கள் சக்தி மீது வைத்துள்ள நம்பிக்கை குறையவே இல்லை. மக்களின் எதிர்பார்ப்புகளை நாம் நிச்சயம் நிறைவேற்றுவோம். அரசியல் இருப்புக்காகவே தேசிய மக்கள் சக்தியை தமிழ் மக்கள் நிராகரித்து விட்டதாக சில குழுக்கள் போலி பிரசாரம் முன்னெடுத்து வருகின்றன" என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

"பொதுத்தேர்தலென்பது வேறு, உள்ளூராட்சி சபைத் தேர்தலென்பது வேறு, எனவே, உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகளுடன்தான், உள்ளூராட்சிசபைத் தேர்தல் முடிவை ஒப்பிடவேண்டும். அந்த அடிப்படையில் பார்த்தால் 2018 தேர்தலில் வடக்கில் விரல் விட்டு எண்ணக் கூடிய வகையில்தான் தேசிய மக்கள் சக்திக்கு பிரதிநிதித்துவம் இருந்தது. ஆனால் இம்முறை வடக்கில் எல்லா பகுதிகளிலும் தேசிய மக்கள் சக்திக்கு பிரதிநிதித்துவம் கிடைக்கப் பெற்றுள்ளது. இது வரலாற்று முக்கியத்துவம்மிக்க விடயமாகும்.

எனினும், மக்களை பிரித்தாள்வதற்கு முற்படும் அரசியல்வாதிகளுக்கு இது பொறுத்துக்கொள்ள முடியவில்லை. அதனால்தான் தேசிய மக்கள் சக்தியை தமிழ் மக்கள் நிராகரித்துவிட்டதாக போலி பிரசாரம் முன்னெடுத்து இன்பம் காண்கின்றனர்.

உள்ளூராட்சிசபைத் தேர்தலில் யாழ்ப்பாணம் உட்பட வடக்கு மாகாணத்தில் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்த அத்தனை சொந்தங்களுக்கும் நன்றிகள் அதேபோல வாக்களிக்காதவர்களுக்கும் எமது சேவைகள் தொடரும் எனத் தெரிவித்தார். (6-8)



சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகம், பெனிசுலா ரோட்டரிக் கழகம் மற்றும் சுன்னாகம் ரோட்டரிக் கழகம் ஆகியன இணைந்து முன்னெடுத்த இந்திய ரோட்டரி மாவட்டம் 209-82இன் நிதிப் பங்களிப்பில் அண்மையில் யாழில் தேவைப்பாடுடைய 20மாணவர்களுக்கான துவிச்சக்கர வண்டிகள் வழங்கி வைக்கப்பட்டிருந்தன. (படம்:-சுபேசன்)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 500 | 400 | 400 | 450 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 190 | 240 |
| பச்சைமிளகாய் | 180 | 200 | 150 | 200 |
| தக்காளி | 950 | 1000 | 900 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 300 | 250 | 200 |
| கோவா | 550 | 500 | 320 | 600 |
| கரட் | 850 | .1000 | 1000 | 900 |
| பூசணி | 200 | 200 | 200 | 250 |
| புடோல் | 280 | 300 | 250 | 300 |
| வாழைக்காய் | 100 | 100 | 70 | 120 |
| சின்ன வெங்காயம் | 280 | 250 | 120-300 | 400 |
| பெரிய வெங்காயம் | 140 | 130 | 110 | 150 |
| பாகற்காய் | 650 | 600 | 450 | 600 |
| வெண்டக்காய் | 300 | 200 | 250 | 500 |
| கருணைக் கிழங்கு | 350 | 250 | 250 | 400 |
| பயற்றங்காய் | 250 | 350 | 300 | 350 |
| லீக்ஸ் | 300 | 300 | 220 | 400 |
| பீற்றூட் | 600 | 600 | 450 | 600 |
| கறிமிளகாய் | 850 | 500 | 450 | 1000 |
| முருங்கைக்காய் | 2300 | 2000 | 1900 | 2000 |
| போஞ்சி | 800 | 600 | 450. | 800 |
| கத்தரிதம்புள்ள | 500 | 400 | -- | 400 |
| கீரை - 1 பிடி | 100 | 150 | 60 | 120 |
| தேசிக்காய் | 300 | 300 | 320 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 150 | 120-300 | 200-240 |
| இராசவள்ளி | 650 | 600 | 450 | 700 |
| வெங்காயப்பூ | -- | 600 | -- | 600 |
| முள்ளங்கி | 200 | 200 | 120 | 300 |
| பொன்னாங்காணி | 120 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 100 | 80 | 100 |
| ஈரப்பலா | -- | 100 | -- | -- |

## பிரதி சபாநாயகரை சந்தித்தார் எகிப்து பிரதிநிதி காலித்



(கொழும்பு)

யுனெஸ்கோவின் பணிப்பாளர் நாயகம் பதவிக்கு எகிப்திலிருந்து போட்டியிடும் காலித் எல். எனெனி இலங்கை பாராளுமன்றத்தின் பிரதி சபாநாயகர் ரிஸ்வி சாலியை கடந்த திங்கட்கிழமை பாராளுமன்றத்தில் சந்தித்தார்.

இலங்கைக்கும் எகிப்துக்கும் இடையில் காணப்படும் நீண்டகால, பரஸ்பர இரு தரப்பு உறவுகள் தொடர்பாக இச் சந்திப்பில் மீண்டும் வலியுறுத்தப்பட்டதுடன், பரஸ்பரம் ஆர்வமுள்ள துறைகளில் இருநாட்டு உறவுகளை மேலும் மேம்படுத்துவதற்கான உறுதிப்பாடும் இங்கு வெளிப்படுத்தப் பட்டது. (நி-8)

## இலங்கை-இந்திய ஒப்பந்தங்களுக்கு எதிராக உயர்நீதிமன்றில் மனுத்தாக்கல்



(கொழும்பு)

கடந்த ஏப்ரல் 5 ஆம் திகதி இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் கையெழுத்தான ஏழு புரிந்துணர்வு ஒப்பந்தங்களை வலுவற்றதாக்குமாறு கோரி உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைகள் மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மற்றும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி முன்னிலையில் ஜனாதிபதி செயலகத்தில் இந்த ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டன.

இந்த மனுவில் பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, அமைச்சரவை உறுப்பினர்கள், சட்டமா அதிபர் மற்றும் பலர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

கலாநிதி குணதாச அமரசேகர உள்ளிட்ட மனுதாரர்கள், இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் இலங்கையின் அரசியலமைப்பு மற்றும் சர்வதேச சட்டத்தை மீறுவதாகவும், பொதுமக்களுக்கு உள்ளடக்கங்கள் குறித்து தெரிவிக்கப்படவில்லை என்றும் குற்றம் சாட்டுகின்றனர்.

பாராளுமன்ற ஆய்வைத் தவிர்ப்பது தேசிய இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டைக் குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது என்று அவர்கள் வாதிடுகின்றனர்.

அடிப்படை உரிமைகள் மீறப்பட்டதாகக் கூறப்படுவது குறித்து உயர் நீதிமன்றத் தீர்ப்பையும், புரிந்துணர்வு ஒப்பந்தங்களைச் செயற்படுத்துவதை நிறுத்த இடைக்கால உத்தரவையும், ரூ.2 மில்லியன் இழப்பீட்டையும் மனு கோருகிறது. (நி-8)

## பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் நியமனம்

(கொழும்பு)

புதிய பரீட்சைகள் ஆணையாளர் நாயகமாக ஏ.கே.சுபாசினி இந்திகா குமாரி லியனகே நியமிக்கப்பட்டுள்ளார்.

உடன் நடைமுறைக்கு வரும் வகையில் இந்தப் பதவி வழங்கப்பட்டுள்ளது.

பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் பதவியில் கடமையாற்றிய எச்.ஜே.எம்.சி.ஏ. ஜயசுந்தரவின் சேவைக்காலம் கடந்த 6 ஆம் திகதியுடன் நிறைவடைந்துள்ளது.

இந்த நிலையில், வெற்றிடமாகவுள்ள பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் பதவிக்கு இலங்கை கல்வி நிர்வாக சேவையின் விசேட தர அதிகாரி ஏ.கே.சுபாசினி இந்திகா குமாரி லியனகே நியமிக்கப்பட்டுள்ளார். (நி-8)


# INVITATION FOR BID

## கேள்வி அறிவித்தல்
## சபை நிதி வேலைத்திட்டம்-2025
## கரைச்சி பிரதேச சபை-கிளிநொச்சி

1. கரைச்சி பிரதேச சபையின் சபை நிதி குறித்த வேலைத்திட்டங்களிற்கான கொடுப்பனவுக்கென பயன்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
2. **தலைவர், பிரதேச பெறுகைக்குழு, கரைச்சி பிரதேசசபை (DivPC)** சார்பாக தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட கட்டுமான வேலைகளுக்காக கோருகின்றார்.
3. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
4. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி CIDA Registration & Grade பொருத்தமான தரத்தினையும் கொண்டிருத்தல் வேண்டும். தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக **தகவல்கள் தரவு அட்டவணை (Schedule 5) கேள்வி ஆவணம் பகுதி 5** இல் காட்டப்பட்டுள்ளது.
5. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தலைவர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி (தொலைபேசி: 021 228 5761, தொலைநகல் : 021 228 5690, E-Mail: kilinochchilkps@gmail.com)** இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் காலை **09.00** மணி முதல் **14.00** மணி வரை **26.05.2025** ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
6. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **தலைவர், கரைச்சி பிரதேச சபை, கிளிநொச்சி** எனும் இடத்திலிருந்து **09.05.2025** ஆம் திகதியிலிருந்து **26.05.2025** ஆம் திகதிவரை அலுவலக நாட்களில் மட்டும் காலை **09.00** மணிக்கும் **14.00** மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணம் (கீழுள்ள அட்டவணையில் உள்ளவாறு வரி நீங்கலாக) செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
7. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் இரு பிரதிகளில் தயாரித்து **தலைவர், கரைச்சி பிரதேச சபை, A9 வீதி கிளிநொச்சி** எனும் முகவரிக்கு **27.05.2025 ஆம்** திகதி மாலை **14.30** மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
8. கேள்விப் பிணை தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.
9. கேள்விகள் திறப்பதற்கான முன்னோடிக்கூட்டம் **2025.05.16** ஆம் திகதி பி.ப **15.00** மணிக்கு கரைச்சி பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் இடம்பெறும். இக் கூட்டத்திற்கு ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் கலந்து கொள்ள முடியும்.

| | |
|---|---|
| Document Issuing/ Purchasing Period | From 2025.05.09 – 2025.05.26 |
| Pre – Bid Confereee | At 15.00 on 2025.05.16 |
| Closing and Opening of Bid | At 14.30 on 2025.05.27 |

| தொ. இல | கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை (ரூ) மில்லியன் (With out Vat) | ஒப்பந்தகாலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி செல்லுபடியாகும் காலம் | வேண்டப்படும் கேள்விப் பிணை: தொகை (ரூபா) | வேண்டப்படும் கேள்விப் பிணை: செல்லுபடியாகும் காலம் | மீளளிக்கப்படாத கட்டணமாக |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | NP/KN/KPS/2025 /PU-02 /C.W 03 | 1. விவேகானந்தநகர் கல்கி கிரவல் வீதித்திருத்தம் (தேவ சபை வீதி, முன்பள்ளி வீதி) 2. விவேகானந்தநகர் கல்கி வீதிக்கான பெட்டிப்பாலம் அமைத்தல் - I 3. விவேகானந்தநகர் கல்கி வீதிக்கான பெட்டிப்பாலம் அமைத்தல் - II | 10.212 | 90 நாட்கள் | C7 or above (Highway) | 12.08.2025 | 155,000.00 | 09.09.2025 | 6000.00 |
| 02 | NP/KN/KPS/2025 /PU-02 /C.W 04 | கிளிநொச்சி நூலகக் கட்டுமான வேலை – கட்டம் II | 14.404 | 90 நாட்கள் | C7 or above (Buildings) | 12.08.2025 | 215,00.00 | 09.09.2025 | 6000.00 |
| 03 | NP/KN/KPS/2025 /PU-02 /C.W 05 | பரந்தன் இந்து மகாவித்தியாலயத்திற்கு முன்பாக உள்ள வீதி. (4ம் ஒழுங்கை ) | 4.237 | 90 நாட்கள் | C8 or above (Highway) | 15.07.2025 | 65,000.00 | 12.08.2025 | 2500.00 |
| 04 | NP/KN/KPS/2025 /PU-02 /C.W 06 | ஸ்கந்தபுர நூலகக் கட்டுமான வேலை – கட்டம் IV | 2.994 | 90 நாட்கள் | C9 or above (Buildings) | 15.07.2025 | 45,000.00 | 12.08.2025 | 2000.00 |
| 05 | NP/KN/KPS/2025 /PU-02 /C.W 07 | இரத்தினபுரம் வீதியின் கிளிநகருக்குரிய 1ம் குறுக்கு வீதி புணரமைப்பும் பெட்டிப்பாலம் அமைத்தலும். | 3.296 | 90 நாட்கள் | C9 or above (Highway) | 15.07.2025 | 50,000.00 | 12.08.2025 | 2500.00 |

2025.05.09

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக்குழு,**
**கரைச்சி பிரதேசசபை, கிளிநொச்சி.**

(சி-2926)

# பாரதம்

## பாப்பரசர் தெரிவு; கரும்புகை வெளியேறியது

(வத்திக்கான்)

புதிய பரிசுத்த பாப்பரசரைத் தெரிவு செய்வதற்கான முதல் சுற்று வாக்கெடுப்பு தீர்மானமின்றி நிறைவடைந்துள்ளது.

கத்தோலிக்க மக்கள் உள்ளிட்ட முழு உலகமும் கவனம் செலுத்தியுள்ள கொன்கிலேவ் எனப்படும் பரிசுத்த பாப்பரசரை தெரிவு செய்வதற்கான இரகசிய வாக்கெடுப்பு நேற்று ஆரம்பமானது.

உலகளாவிய ரீதியில் இருக்கும் 252 கத்தோலிக்க கர்தினால்களில் 135 பேர் கூடி புதிய பாப்பரசர் ஒருவரைத் தெரிவு செய்வதற்காக சிஸ்டைன் தேவாலயத்தில் நடந்த சிறப்புப் பிரார்த்தனைக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

ஆராதனையைத் தொடர்ந்து கர்தினால்கள் இரகசிய வாக்கெடுப்பு இடம்பெறும் அறைக்குள் சென்றனர்.

புதிய பாப்பரசர் தெரிவு செய்யப்படும் வரையில் கர்தினால்கள் வெளி உலகத்துடன் எவ்வித தொடர்புகளையும் ஏற்படுத்த முடியாது.

நற்செய்தி கிடைக்கப் பெறும் வரையில் ஆயிரக் கணக்கான மக்கள் வத்திக்கானில் உள்ள செண் பீட்டர்ஸ் சதுக்கத்தில் கூடியிருந்தனர்.

வத்திக்கான் நேரப்படி நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் சிஸ்டைன் தேவாலயத்தின் கூரையில் உள்ள புகை போக்கியில் இருந்து கறுப்பு புகை வெளியானது.

முதல் சுற்று இரகசிய வாக்கெடுப்பில் புதிய பாப்பரசர் தெரிவு செய்யப்படாமையை இது குறிக்கின்றது.

அதற்கமைய இரகசிய வாக்கெடுப்பு மீண்டும் இடம்பெறவுள்ளது. (நி-8)



## லாகூர் விம...

## தொடர் கு...

- பல அடி உயரத்திற்கு எழு...
- அபாய ஒலி எழுப்பி எச்சரி...
- பீதியில் பாகிஸ்தான் மக்க...

(இஸ்லாமாபாத்)

**இந்தியா-பாகிஸ்தான் இடை... றம் நிலவி வரும் நிலையில் நேற்று... முக்கிய நகரான லாகூரில் விம... அருகே தொடர் குண்டு வெடிப்பு இட...**

விமான நிலையம் அருகே உள்ள கோபால் நகர், நசீரா பாத் உள்ளிட்ட பகுதிகளில் தொடர் குண்டுவெடி... நடந்தது. அங்கு பல அடி உ... ரத்துக்கு கரும்புகை எழும்பியது...

## இந்தியாவின் மகிழ்ச்சி துக்கமாக மாறும்!

### எச்சரிக்கை விடுத்த பாகிஸ்தான்



(இஸ்லாமாபாத்)

இந்தியாவின் "ஆப்ரேஷன் சிந்தூர்" அதிரடி தாக்குதலால் பாகிஸ்தான் அதிர்ந்து போய் உள்ளது. அந்நாட்டின் லாகூர் நகரில் அவசர நிலை பிறப்பிக்கப்பட்டுள்ளது

இந்நிலையில் "தகுந்த நேரத்தில் இடங்களைத் தெரிவு செய்து தாக்குதல் நடத்துவோம். இது இந்தியாவுக்குத் தற்காலிக மகிழ்ச்சி. இது விரைவில் இந்தியாவுக்குத் துக்கமாக மாறும்" இவ்வாறு பாகிஸ்தான் தெரிவித்துள்ளது. (நி-8)

## பயங்கரவாத உட்கட்டமைப்பை அழித்தது நியாயமானது பிரிட்டன் முன்னாள் பிரதமர் ரிஷி சுனக்

(லண்டன்)

பயங்கரவாத உட்கட்டமைப்பை அழித்தது நியாயமானது என்று பிரிட்டனின் முன்னாள் பிரதமரும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவருமான ரிஷி சுனக் தெரிவித்தார்.



ஏப்ரல் 22 ஆம் திகதி பஹல்காமில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் பயங்கரவாத உட்கட்டமைப்புகள் மீது ஆப்ரேஷன் சிந்தூர் என்ற பெயரில் இந்திய இராணுவம் தாக்குதல் நடத்தி வருகிறது. இந்நிலையில் பிரிட்டன் முன்னாள் பிரதமர் ரிஷி சுனக், இந்திய நடவடிக்கைக்கு ஆதரவு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ரிஷி சுனக் கூறியதாவது,

வேறொரு நாட்டின் கட்டுப்பாட்டில் உள்ள நிலத்திலிருந்து தனக்கு எதிராகப் பயங்கரவாதத் தாக்குதல்கள் நடத்தப்படுவதை எந்த நாடும் ஏற்றுக்கொள்ள வேண்டியதில்லை. பயங்கரவாத உட்கட்டமைப்பை இந்தியா தாக்குவதில் நியாயம் உள்ளது. பயங்கரவாதிகளுக்கு இதை விட வேறு எந்தத் தண்டனையும் இருக்க முடியாது. இவ்வாறு ரிஷி சுனக் தெரிவித்தார். (நி-8)

# வெளிநாடு



# மான நிலையம் அருகே
# தண்டு வெடிப்புக்கள்!

## ழந்த கரும்புகை
## சரிக்கை
## கள்

**டயே போர்ப் பதற் ற்று பாகிஸ்தானின் விமான நிலையம் டம்பெற்றது.**

வடிப்பு உய பியது.

அடுத்தடுத்து பலத்த சத்தங்கள் கேட்டதால் மக்கள் கடும் பீதியடைந்தனர்.





மேலும் அபாய ஒலி எழுப்பப்பட்டதால் மக்கள் வீடுகளில் இருந்து அவசரமாக வெளியேறினர். மேலும் லாகூர் விமான நிலையத்திலும் அபாய ஒலி எழுப்பப்பட்டது. அனைத்து வைத்திய சாலைகளையும் தயார் நிலையில் இருக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் பயணிகள் பீதியடைந்தனர்.

லாகூரில் குண்டு வெடிப்பு நடந்ததை பொலிஸார் உறுதி செய்தனர்.

விமானநிலையத்திற்கு அருகிலுள்ள வால்டன் சாலையில் ஒரு பெரிய குண்டுவெடிப்பு நடந்தது என்றும் ட்ரோன்கள் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கலாம் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

முன்னதாக நள்ளிரவில் லாகூர் மற்றும் இஸ்லாமாபாத் விமான நிலையங்களில் உள்ள அனைத்து வணிக விமானங்களுக்கும் பாகிஸ்தான் அரசு தனது வான் வெளியை மூடியதாக அறிவித்தது. (நி-8)



## ஆப்ரேஷன் சிந்தூர்
## பெயருக்கான காரணத்தை வெளியிட்ட இந்தியா



(டில்லி)

பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் நேற்று முன்தினம் புதன்கிழமை ஒன்பது தளங்களைத் தாக்கி இந்தியா பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலுக்குப் பதிலடி கொடுத்த போது, அந்தத் திட்டத்திற்கு ஆப்ரேஷன் சிந்தூர் என்று பெயரிட்டது.

சிந்தூர் அல்லது குங்குமம் என்பது திருமணமான இந்துப் பெண்களின் அடையாளமாகும்.

ஏப்ரல் 22 பஹல்காம் பயங்கரவாதத் தாக்குதலில் கணவன் களை இழந்த பெண்களை மனதில் கொண்டு, பதிலடி கொடுக்கும் இராணுவ நடவடிக்கைக்கு "ஆப்ரேஷன் சிந்தூர்" என்று குறியீட்டுப் பெயரை வைத்தது பிரதமர் நரேந்திர மோடிதான் என்று அரசாங்கத்தின் உயர் வட்டாரங்கள் கூறியுள்ளதாக இந்திய ஊடங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (நி-8)

## சவுதி அரேபியா அமைச்சருடன் ஜெய்சங்கர் ஆலோசனை

(டில்லி)

இந்தியா, பாகிஸ்தான் இடையே பதற்றமான சூழல் நிலவி வரும் நிலையில் சவுதி அரேபியா வெளியுறவுத் துறை இணை அமைச்சருடன் இந்திய மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் ஆலோசனை நடத்தினார்.

கடந்த ஏப்ரல் 22ஆம் திகதி பஹல்காமில் பாகிஸ்தான் ஆதரவு பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 26 இந்தியர்கள் சுட்டுக்கொல்லப் பட்டனர். இந்த சம்பவத்தைத் தொடர்ந்து, இந்தியாவும் ஆப்ரேஷன் சிந்தூர் என்ற பெயரில் பதிலடி கொடுத்துள்ளது.

இதனால், இரு நாடுகளிடையே பதற்றமான சூழல் நிலவி வருகிறது. அமெரிக்கா, பிரிட்டன் உள்ளிட்ட பல்வேறு நாடுகள், இந்தியா, பாகிஸ்தான் இடையிலான போர்ப்பதற்றத்தைத் தணிக்க வேண்டும்என்று கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இந்த நிலையில், திடீர் பயணமாக இந்தியா வந்துள்ள சவுதி அரேபியாவின் வெளியுறவுத்துறை இணையமைச்சர் அடெல் அல்-அல்ஜுபைர், இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

அப்போது, இந்தியா, பாகிஸ்தான் இடையிலான போர்ப் பதற்றத்தைத் தணிப்பது குறித்து ஆலோசனை நடத்தப்பட்டது.

இது குறித்து எக்ஸ் தளத்தில் பதிவிட்ட அமைச்சர் ஜெய்சங்கர், "பயங்கரவாதத்தை இந்தியா எதிர்க்கும் விதம் குறித்து சவுதி அரேபியாவின் வெளியுறவுத்துறை இணையமைச்சர் அடெல் அல்-அல்ஜுபைர் உடன் ஆலோசனை நடத்தியதாக குறிப்பிட்டார்.

அதேபோல, ஈரான் வெளியுறவுத்துறை அமைச்சர் அப்பாஸ் அரக்ச்சி நேற்று முன்தினம் இரவு டில்லி வந்தார். இந்தியா, பாகிஸ்தான் தாக்குதல் சம்பவம் குறித்து அமைச்சர் ஜெய்சங்கருடன் அவர் ஆலோசனை நடத்தினார். (நி-8)



# தெற்கு அதிவேக வீதியில் வான் - பாரவூர்தி விபத்து




(கொழும்பு)

தெற்கு அதிவேக வீதியில் பலட்டுவ நுழைவாயிலுக்கு அருகில், மாத்தறை -அக்குரஸ்ஸ பிரதான வீதியில், நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பாரவூர்தியுடன் வான் ஒன்று மோதி விபத்துக்குள்ளானதில் 12 பேர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்கள் சிகிச்சைக்காக மாத்தறை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து மாத்தறையைச் சேர்ந்தவர்களை ஏற்றிச் சென்ற வான் ஒன்றே விபத்துக்குள்ளாகியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்துத் தொடர்பில் மாலிம்படை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி-8)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1991-இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: O/L, குருக்கள்
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15420

பிறப்பு: 1994-இந்து
நட்சத்திரம்: சுவாதி
உயரம்: 5'9"
தகைமை/தொழில்-MBBS,Surgical Registar
எதிர்பார்ப்பு: Engineer, IT Field ,Doctor
தொ.இ: B/15422

பிறப்பு: 1994-இந்து
நட்சத்திரம்: சதயம்
12இல் செவ்
உயரம்: 5'11"
தகைமை/தொழில்: A/L, Driver
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15424

பிறப்பு: 1987- இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
7இல் செவ்
கி.பா-33
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: A/L,Business
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15425

பிறப்பு: 1987- இந்து
நட்சத்திரம்-அனுசம்
கி.பா-35
12இல் செவ்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: O/L,Computer Repairing
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/15426

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1997-RC
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: Child Care(Swiss)
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/15429

பிறப்பு: 2001-இந்து
நட்சத்திரம்: பூராடம்
கி.பா-66
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/15434

பிறப்பு: 1990-RC
தகைமை/தொழில்: BA , சமுர்த்தி உத்தியோகத்தர்
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/15442

பிறப்பு: 1995-இந்து
நட்சத்திரம்: சுவாதி
1இல் செவ்
கி.பா: 57
உயரம்: 5'3"
தகைமை/தொழில்-HNDA, Media
எதிர்பார்ப்பு:Business,உத்தியோகம், வெளிநாடு
தொ.இ: G/15443

பிறப்பு: 1998-இந்து
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா: 32
உயரம்: 5'3"
தகைமை/தொழில் -BSc (Software Engineering)
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம், வெளிநாடு
தொ.இ: G/15445

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 369

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



# கையூட்டு

ஒரு காலத்தில் பிரஷ்யா என்று ஒரு தேசம் இருந்தது.

இப்பொழுது ஜேர்மனி இருப்பது போல் இதன் பெரும்பகுதி ஒரு காலத்தில் "பிரஷ்யாங்" என்னும் பெயருடன் இருந்தது. அப்பொழுது அதற்கு அரசராக இருந்தவர் மகாபிரடரிக்! (ஃபிரெடரிக் தி கிரேட்)

அந்த ராஜாவுக்கு ஒரு சந்தேகம்.

"நாம் பலவகையான வரிகளை விதித்து வசூல் செய்கிறோம். அப்படி செய்தும் வருமானம் குறைந்து கொண்டே போகுதே...இதற்கு என்ன காரணமாக இருக்கும்?" இதுதான் அவருக்கு ஏற்பட்ட சந்தேகம். ஒரு சமயம் அந்த அரசர் தம்முடைய அமைச்சர்களையும் பிரபுக்க ளையும், தளபதிகளையும் கூப்பிட்டு ஒரு விருந்து வைத்தார். விருந்து முடிந்ததும் அவர்களைப்பார்த்து இந்த சந்தேகத்தைக் கேட் டார். வரிகள் அதிகமாக விதித்தும் வருமானம் குறைவதற்கு என்ன காரணம்? என்று கேட்டார். பல பேருக்கு இதற்குச் சரியாக பதில் சொல்லத் தெரியவில்லை. அனுபவசாலியான ஒரு தளபதி எழுந்தார்.

அரசே! அது எப்படி என்பதை இப்பொழுது உங்களுக்கு காட்டுகின்றேன் என்றார். உடனே ஒரு பெரிய பனிக்கட்டி ஒன்றை தன்னுடைய கையிலே எடுத்தார். அதை அப்படியும் இப்படியும் திருப்பிப்பார்த்தார். அப்புறம் அதை அடுத்தவரிடம் கொடுத்தார். அவரும் அதை பார்த்து விட்டு அடுத்தப்படியாக இருந்தவரிடம் கொடுத்தார். இப்படியே இது ஒவ் வொருத்தர் கையாகமாறி கடைசியிலே மன்னர் கைக்குப் போய்ச் சேர்ந்தது. மன்னர் கைக்கு அந்தப் பனிக்கட்டி போய்ச்சேர்ந்த பொழுது அது கொஞ்சமாக உருகி ஒரு பட்டாணி கடலை அளவுக்கு ஆகியது. மன்னர் யோசித்தார். வரி அதிகமாகப் போட்டாலும் வந்து சேருவது குறைவாக இருக்கிறது என்ன காரணம் என்பது அவருக்குப் புரிந்து போய்விட்டது. காலம்தான் மாறிக் கொண்டிருக்கிறதே தவிர இந்த கையூட்டு வாங்கும் பழக்கம் மாறினதாக இல்லை.

இன்னொரு ராஜா இருந்தார். அவர் தன்னுடைய ராஜாங்கத்திலே லஞ்ச ஊழலே இருக்கக் கூடாது என்று நினைத்தார். அவரிடம் பல்வேறு துறைகளுக்கும் பொறுப்பாக இருந்த பலபேரும் மிகவும் சுத்தமாகவும், நேர்மையாகவும் இருந்தார்கள். ஒரே ஒருத்தர் மட்டும் எல்லோரிடமும் லஞ்சம் வாங்கிக்கொண்டே இருந்தார். அவரை வேறு துறைகளுக்கு மாற்றிப் பார்த்தார் அந்த ராஜா. எந்த வேலையைக் கொடுத்தாலும் அதிலும் லஞ்சம் வாங்குவதற்கு ஒரு வழியை உண்டு செய்து கொள்ளுவார் அந்த ஆள்.

ராஜாவுக்கு இது ஒரு பெரிய தலைவலியாகப் போய்விட்டது! இவரை என்ன செய்வது? இவருக்கு என்ன வேலையைக் கொடுப்பது? கொஞ்சம் கூட லஞ்சம் வாங்குவதற்கு சந்தர்ப்பமே இல்லாத ஒரு வேலையைக் கொடுக்க வேண்டும் என்று திட்டம் போட்டார். ஒரு நாள் அவருக்கு அந்த உத்தரவும் போட்டார். அதாவது அவருக்கு! என்ன வேலை என்றால் கடற்கரையில் தான் அவருக்கு வேலைத்தளம். அங்கேயே இருந்து கொள்ள வேண்டியது தினமும் எத்தனை கடல் அலை கரையிலே வந்து மோதுகின்றது என்பதை கணக்கெடுத்து ராஜாவுக்கு தெரிவிக்க வேண்டியது. இதுதான் அவருக்கு வேலை. பேசாமல் அலையை எண்ணிக் கொண்டு உட்கார்ந்திருக்கட்டும். அப்பொழுதாவது அவர் லஞ்சம் வாங்குவதற்கு சந்தர்ப்பம் இல்லாமல் போய்விடும் என்று நினைத்தார் ராஜா.

இந்த ஆள் கடற்கரைக்குப் போய் கடமையைத் தொடங்கினார்.

ஒரே மாதத்திலே அங்கே சொந்தமாக ஒரு பிரமாண்டமான மாளிகை கட்டினார். ராஜாவுக்கு இது பெரிய ஆச்சரியமாக போய்விட்டது! அலையை எண்ணும் வேலையில் அந்த ஆள் எப்படி பணம் சம்பாதித்தார் என்று விசாரித்துப் பார்த்தார். அக்கம் பக்கத்திலே!

அந்த ஆள் என்ன செய்திருக்கின்றார் என்றால் கடற்கரையில் போய் பொறுப்பேற்றவுடனே அங்கே இருந்த மீனவர்களிடம். "இந்த கரையிலே ஒரு நாளில் வந்து மோதும் அலைகள் எத்தனை?" என்று கேட்டிருக் கின்றார். "அது எப்படி தெரியும்?" என்றிருக்கின்றார்கள் அவர்கள்.

தினமும் அந்த எண்ணிக்கை தெரிய வேண்டும். எம் ராஜாவுக்கு தினமும் அறிக்கை அனுப்ப வேண்டும் தவறினால் நீங்கள் இந்த கடலிலே போய் மீன்பிடிப்பதற்கு ராஜாவின் அனுமதி கிடைக்காது!" என்றிருக்கின்றார் இவர். மீனவர்கள் பயந்து போய் விட்டார்கள் ! கடலுக்குப் போக அனுமதி க்காவிட்டால் பட்டினி கிடக்க நேரிடும். மெதுவாக அந்த ஆளிடம் போனார்கள்! காதோட காதாக சொன்னார்கள். "ஐயா... எங்களால் கடல் அலையை எண்ண முடியாது தினமும் எங்களால் முடிந்ததை உங்களுக்கு பணமாகக் கொடுத்து விடுகின்றோம். நீங்கள் தான் ராஜாவிடம் சிபாரிசு செய்து நாங்கள் தொடர்ந்து மீன் பிடிப்பதற்கு அனுமதி வாங்கிக் கொடுக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டார்கள். பணம் தினமும் வந்து சேர ஆரம்பித்தது. "பதவியிலே ஏனைய பதவியைவிட இந்தப் பதவி எவ்வளவோ மேல்! "என்று நினைத்து விட்டான் அந்த ஆள் அதுமட்டுமில்லை.... "தயவு செய்து என்னை இந்த இடத்தைவிட்டு மாற்றிவிடாதீர்கள்" என்று வேறு கேட்க ஆரம்பித்து விட்டான்.

## வட.கிழக்கில்
# தேசியத்தை நேசிக்கும் கட்சிகளை இணைத்து
## ஆட்சி அமைப்போம்-செல்வம் எம்.பி



(மன்னார்)

தேசியத்தை நேசிக்கும் கட்சிகளை இணைத்துக் கொண்டு நாங்கள் ஆட்சி அமைப்போம் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் நேற்று மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், நடைபெற்று முடிந்துள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் மக்கள் வடக்கு கிழக்கில் எமக்கு ஆணை தந்துள்ளனர். எதிர்வரும் காலங்களில் அனைவரும் ஒற்றுமையாகச் செயற்படவில்லை என்றால் மக்கள் வழங்கிய ஆணையை மாற்றியமைக்க வேண்டிய நிலை ஏற்படும் என்ற செய்தியை சொல்லியுள்ளனர்.

நாங்கள் ஒற்றுமையாக இல்லாத நிலையில் கடந்த பாராளுமன்றத் தேர்தலில் ஜே.வி.பி.அரசாங்கத்திற்கு கூடுதலாக மக்களின் ஆதரவு கிடைக்கப்பெற்றுள்ளமை அனைவரும் அறிந்த விடயம். எனினும் இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வடக்கு, கிழக்கில் ஜே.வி.பி.பாரிய பின்னடைவைச் சந்தித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை வைத்துப் பார்க்கின்ற போது வடக்கு கிழக்கில் எந்தக் கட்சியும் தனித்து ஆட்சி செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் தேசியத்தை நேசிக்கும் கட்சிகளை இணைத்துக் கொண்டு நாங்கள் ஆட்சி அமைப்போம்.

எங்களுடைய முதல் ஆட்சி அமைக்கின்ற செயற்பாடுகள் தமிழ் தேசிய கட்சிகளுடன் இருக்கும். அதனடிப்படையில் பேச்சுவார்த்தைகள் இடம் பெற்றுக் கொண்டிருக்கிறது.

எதிர்வரும் காலங்களில் நாங்கள் ஒற்றுமையாக ஒரே அணியாக செயற்படுவதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்துவோம். மேலும் மக்களின் ஆணையை உணர்ந்தவர்களாக நாங்கள் செயற்பட வேண்டும் என தெரிவித்தார். (6-8-285)

## கிளிநொச்சி மத்திய பேருந்து நிலைய அபிவிருத்தி ஆராய்வு



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மத்திய பேருந்து நிலையத்தை மேலும் அபிவிருத்தி செய்து வினைத்திறனாக செயற்பட வைப்பது தொடர்பான கலந்துரையாடல் வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் நேற்று கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

எதிர்காலத்தில் கரைச்சி பிரதேச சபையிடம் கையளித்து வினைத்திறனாக முன்னெடுப்பது தொடர்பாகவும் குறித்த விடயத்தை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்திற்கு சமர்ப்பிப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

குறித்த கலந்துரையாடலில் மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.முரளீதரன், வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் அ.சோதிநாதன், காணிப் பிரிவிற்கான மேலதிக அரசாங்க அதிபர் நளாயினி இன்பராஜ், வடமாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபைத் தலைவர் ஆர். உமாகரன், பிரதேச செயலாளர், மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர், கரைச்சிப் பிரதேச செயலாளர், வர்த்தகர்கள் என பலர் கலந்து கொண்டனர். (6-8-33-316)

## யாழ். நாக விகாரையில் வெசாக் தின நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பாதுகாப்பு படைத் தலைமையகம் மற்றும் 51ஆவது காலாட் படை தலைமையகம் இணைந்து ஏற்பாடு செய்துள்ள வெசாக் தின நிகழ்வுகள் யாழில் எதிர்வரும் 12, 13 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.

யாழ். ஸ்ரீ நாக விகாரையில் குறித்த நிகழ்வுகள் ஒழுங்கமைப்புச் செய்யப்பட்டுள்ளன. இதன்போது அலங்கார வெளிச்சக்கூடு கண்காட்சி, அன்னதான நிகழ்வுகள் மற்றும் பக்திப் பாடல்கள் இசைத்தல் போன்ற நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (6-8)

## செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி கல்வி வலய ஆரம்பக் கல்விப் பிரிவு நடத்தும் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு யா/சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில் இடம்பெறவுள்ளது.

தென்மராட்சிக் கல்வி வலய அபிவிருத்திப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் மு.ஜெகதாசன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக கோப்பாய் ஆசிரியர் கலாசாலை அதிபர் ச.லலீசன்கலந்து கொள்ளவுள்ளார். (6-8-33)

## வெள்ளி விழா கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக பட்டதாரிக் கற்கைகள் பீடத்தின் வெள்ளிவிழா நிகழ்வு தொடர்பான கலந்துரையாடல் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை முற்கபல் 10 மணிக்கு பட்டதாரிக் கற்கைகள் பீடத்தில் இடம்பெறவுள்ளது.

இதனுடன் தொடர்புடையவர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு பட்டதாரிக் கற்கைகள் பீட பழைய மாணவர் சங்கம் அறிவித்துள்ளது. (6-8)

## கா.பொ.த உயர்தர பரீட்சை பெறுபேறுகள் -2024

### கிளி/முழங்காவில் மகா வித்தியாலயம்

#### வர்த்தகப்பிரிவு

சூ.திபோசன் -3ஏ, உ.அஸ்ரின்- 2ஏபி

#### கலைப்பிரிவு

ம.கம்சா- 3ஏ, கா.தமயந்தி- 3ஏ, மு.எழிலழகன்-3ஏ, சி.சிந்துஜன்-3ஏ, கி. கலைவாணி- 3ஏ, ற.நிரோஜன்-3ஏ, கு.ஜினோத்-3ஏ, அ.யுவன்சியா- 3ஏ, ப.மேரி ஜெனிற்றா- 3ஏ, கு.யாழினி- 2ஏபி, இ.அமலறின்சி - 2ஏபி, கு. திசாளினி -2ஏபி, பு.ஜெனோசா- 2ஏபி, யோ.ஜான்சிகா- 2ஏபி, கு.பானுஜா- 2ஏபி, கு.பானுஜா- 2ஏபி

### கிளி/பூநகரி மத்திய கல்லூரி

#### விஞ்ஞானப்பிரிவு

ப.சரவணப்பிரியன்-2ஏபி

#### கணிதப்பிரிவு

ம.கோவண்ணன்-3ஏ

#### கலைப்பிரிவு

இ.லதுசிகா 3-ஏ, ஆ.நதீசன்-3ஏ, ய.கம்சிகா -2ஏபி, கி.யதுஷா- 2ஏபி ஞா. கீர்த்திகா- 2ஏபி

### யாழ்/கோண்டாவில் இந்துக்கல்லூரி

#### கலைப்பிரிவு

பி.கௌசிகா -3ஏ

## மல்லாகம் பிரிவுக்கு பதில் மரண விசாரணை அதிகாரி

(கரணவாய்)

யாழ்.மல்லாகம் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கு புதிய பதில் மரண விசாரணை அதிகாரி நியமிக்கப்பட்டுள்ளார்.

அதன்படி, புதிய பதில் மரண விசாரணை அதிகாரியாக நமசிவாயம் பிறேம்குமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

குறித்த நீதிமன்ற எல்லைக்குட்பட்ட சண்டிலிப்பாய், சங்கானை, உடுவில், தெல்லிப்பழை ஆகிய பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் இடம்பெறும் திடீர் மரணங்களுக்கான மரண விசாரணைகளுக்காக இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் யாழ்ப்பாணம் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குட்பட்ட பகுதிகளில் இது வரை காலமும் கடமை புரிந்தார்.

இந்த நிலையில் மேலதிகமாக மல்லாகம் நீதிமன்ற நியாயாதிக்க எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பணி புரிவதற்கான நியமனம் வழங்கப்பட்டது..

நீதியமைச்சின் செயலாளரால் இந்த நியமனக் கடிதம் வழங்கி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8-60)

## திருவிழாவில் யானை மிரண்டதில் இருவர் காயம்
### யாழில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழில் உள்ள ஆலயம் ஒன்றுக்கு தென்னிலங்கையில் இருந்து அழைத்து வரப்பட்ட யானை மிரண்டதில் இருவர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தாவடிப் பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றில் , நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு திருமஞ்சத் திருவிழா இடம்பெற்றது.

திருவிழாவிற்காக தென்னிலங்கையில் இருந்து இரு யானைகள் அழைத்து வரப்பட்டு இருந்தன.

மஞ்சத் திருவிழாவின் போது , மஞ்சத்திற்கு முன்பாக இரு யானைகளும் அழைத்து வரப்பட்டன.

அவ்வேளை வெடிகள் கொளுத்தப்பட்டு , தீப்பந்த விளையாட்டுக்கள் இடம் பெற்றன.

அதன்போது யானைகளில் ஒன்று மிரண்டதில், அருகில் நின்ற இருவர் காயமடைந்துள்ளனர் காயமடைந்தவர்களை அங்கிருந்து மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர். (6-8-33)

## கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

### காவியத் தொடர் 767





வெளிப்படையாகத் தெரியும் கதவு ஒன்றும் இல்லை. சுவர்களையெல்லாம் தொட்டுப் பார்த்துக் கொண்டும் தட்டிப் பார்த்துக் கொண்டும் வந்தான் ஒன்றும் பயன் படவில்லை. நேரமாக ஆக வந்தியத்தேவனுக்குக் கோபம் அதிகமாகி வந்தது. 'இந்த அநாவசியமான காரியத்தில் பிரவேசித்து இப்படி வந்து மாட்டிக் கொண்டோமே' என்று ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. சுவர்களின் ஓரமாகச் சுற்றி வந்து கொண்டிருந்த போது ஓரிடத்தில் ஒரு யானையின் முகம் துதிக்கையுடனும் தந்தங்களுடனும் சுவரோடு சேர்த்துப் பொருத்தப் பட்டிருப்பதைப் பார்த்தான்.

பின்னர், என்ன செய்வதென்று யோசித்தான். வந்த வழி தானாக மூடிக் கொண்டு விட்டது. அதை மறுபடியும் கண்டுபிடித்துக் கொண்டு வந்த வழியே செல்வதா? அல்லது இந்த பயங்கர மண்டபம் கடம்பூர் மாளிகையில் எந்தப் பகுதியில் இருக்கிறது என்று கண்டுபிடிப்பதா? வேறு எந்த அறைக்குள்ளேனும் இங்கிருந்து வழி போகிறதா என்று கண்டுபிடிக்கும் முயற்சியில் இறங்குவதா? சுவர்களில் எங்கேயாவது கதவு இருக்கிறதா என்று பார்த்துக் கொண்டு சுற்றிச் சுற்றி வந்தான்.

"நாசமாய்ப் போன யானையே! நீ நகர்ந்து கொடுத்தல்லவா என்னை இந்தச் சிறைச்சாலைக்குள் கொண்டு சேர்த்தாய்?" என்று அந்த யானையை நோக்கித் திட்டினான். யானை பேசாதிருந்தது உயிர் உள்ள யானையே பேசாது. உயிரில்லாத நாரும் உமியும் அடைத்த யானை என்ன செய்யும்? துதிக்கையைக் கூட ஆட்டாமல் சும்மா இருந்தது.

"என்ன நான் கேட்கிறேன், பேசாமல் இருக்கிறாய்?" என்று சொல்லிக்கொண்டே வந்தியத்தேவன் யானையின் தந்தங்களைப் பிடித்துக் கொண்டு ஒரு திருகு திருகினான். அடுத்த வினாடியில் அந்த மாயாஜாலம் நடந்தது.

தந்தத்தைத் திருகியதும், சுவரோடு ஒட்டியிருந்த யானையின் காது அசைந்தது. அசைந்தது மட்டுமல்ல மடங்கி நகர்ந்து கொடுத்தது. அங்கே சுவரில் ஒரு பெரிய துவாரம் தெரிந்தது. அடங்கா வியப்புடன் வந்தியத்தேவன் அந்தத் துவாரத்துக்கு அருகில் முகத்தை நீட்டி எட்டிப் பார்த்தான்.

பார்த்த இடத்தில் ஒரு பெண்ணின் முகம் தெரிந்தது. அது ஓர் இளம் பெண்ணின் முகம் கரிய நிறத்து அழகிய பெண்ணின் முகம். அந்த முகத்திலிருந்த பெரிய கண்கள் இரண்டும் விரிந்து விழித்துக்கொண்டிருந்தன, ஆச்சரியம்! ஆச்சரியம்! அந்தப் பெண்ணின் முகத்துக்கு அருகில் வந்தியத்தேவன் தன்னுடைய முகத்தையும் கண்டான். ஒரு பெண்ணுக்கு அவள் காதலன் முத்தம் கொடுக்க எத்தனித்தால் எப்படி முகத்தை அருகில் கொண்டு போவானோ அந்த நிலையில் வந்தியத்தேவன் தன் முகத்தையும் அந்தப் பெண்ணின் முகத்தையும் பார்த்தான். ஏற்கனவே அகன்று விழித்துக் கொண்டிருந்த அப்பெண்ணின் கண்கள் இப்போது இன்னும் அகலமாக விரிந்து, சொல்ல முடியாத வியப்பைக் காட்டின. வியப்புடன் சிறிது பயமும் அப்பார்வையில் பிரதிபலித்தது. ஒரு கணம் அந்தப் பெண் முகம் அப்படிப் பார்த்துக் கொண்டிருந்தது. அடுத்த கணம் அவள் தன் செக்கச் சிவந்த இதழ்களைக் குவித்துக் "கூ!" என்று சத்தமிட்டாள்.

வந்தியத்தேவனைத் திடீரென்று திகில் பற்றிக் கொண்டது. அந்தத் திகிலில் யானைத் தந்தத்திலிருந்து தன்னுடைய கைகளை எடுத்தான்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## தவளைக் குட்டிச்சீடன்



முட்டாளையும் மூடனையும் தவிர பரமார்த்த குருவும் மற்றைய சீடர்களும் ராஜ வீதியில் காத்திருந்தனர். அந்த நாட்டு மன்னன் தேரில் ஊர்வலமாக வந்து கொண்டு இருந் தான்.

தங்கள் அருகே தேர் வந்ததும் கையில் தயாராக வைத்திருந்த செத்துப் போன தவளையையும், ஓணானையும் தேரின் சக்கரத்தில் போட்டான், மட்டி.

அதன் மீது சக்கரம் ஏறி நகர்ந்ததும் நசுங்கிப் போன தவளையையும் ஓணானையும் தூக்கி வந்தான் மடையன்.

பரமார்த்தர், தேருக்கு முன்னால் சென்று, ஐயோ! என் சீடர்களைக் கொன்று விட்டாயே! இது தான் நீ குடிமக்களைக் காப்பாற்றும் முறையா? என்று கூச்சலிட்டார்.

மட்டியும் மடையனும் சேர்ந்து கொண்டு, ஐயோ, கொஞ்ச நேரத்துக்கு முன்னால் எங்களோடு சிரித்துப் பேசிக் கொண்டு இருந்தீர்கள். அதற்குள் இப்படி நசுங்கிக் கூழ் கூழாக ஆகிவிட்டீர்களே! என்று ஒப்பாரி வைத்தனர்.

அரசனுக்கும் அமைச்சர்களுக்கும் ஒன்றும் புரியவில்லை. யாரைக் கொன்றேன்? எனக் கேட்டான், மன் னன். என் அருமையான சீடர்களான முட்டாளையும், மூடனையும் நீதான் தேர் ஏற்றிக் கொன்று விட்டாய்! என்று குற்றம் சாட்டினார் குரு. அப்படியானால் எங்கே அவர்களின் உடல்கள்? என்று மந்திரி கேட்டார். இதோ இவை தான் என்றபடி, நசுங்கிப் போன தவளையையும், ஓணானையும் காட்டினார், பரமார்த்தர். எல்லோருக்கும் வியப்பாக இருந்தது இது தவளை அல்லவா? இந்தத் தவளையா உன் சீடன்? எனக் கேட்டான், மன்னன்.

இது ஓணான் இதுவா உன் சீடன்? யாரை ஏமாற்றப் பார்க்கிறாய்? என்று கோபமாகக் கேட்டார். ஓர் அமைச்சர். அரசே! நான் எதற்கு உங்களை ஏமாற்ற வேண்டும்? உண்மையாகவே இந்தத் தவளையும் ஓணானும் என் சீடர்கள் தான் நம்மைப் போல மனிதர்களாகத்தான் இவர்கள் இருந்தார்கள். ஒரு மந்திரவாதியின் சாபத்தால் இப்படி ஆகிவிட்டார்கள்! என்று பொய் கூறினார் பரமார்த்தர்.

தவளைதான் என்றாலும் மனிதர்களைப் போலவே பேசுவான்! ஓணான்தான் என்றாலும் தினம் நூறு பொற்காசு சம்பாதித்துக் கொண்டு வந்து கொடுப்பான்! என்று புளுகினான் மண்டு. இதைக் கேட்டு, அரசனுக்கும் மந்திரிகளுக்கும் பெரும் சங்கடமாக இருந்தது.

சரி நடந்தது நடந்து விட்டது. இப்போது என்ன சொல்கிறீர்கள்? என்று கேட்டார், அமைச்சர், என்ன செய்வதா? இவர்களை வைத்துத்தானே எங்கள் பிழைப்பே நடந்தது.

(தொடரும்...)

இலகுவான சுபாவமுடைய மற்றவர்களை அனுசரித்து நடந்து நல்லிணக்கத்தை மலர செய்வார்.

– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஓ! தமிழ் அரசியல்வாதிகளே இனியாவது ஒற்றுமைப்பட முடியாதா?

தமிழர் தாயகத்தில் பொதுத் தேர்தலின் போது ஏற்பட்ட அதிர்ச்சியை உள்ளூராட்சி சபைத் தேர்தல் ஆற்றுப்படுத்தியுள்ளது எனலாம் .

ஆம், உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ் மக்கள் தமிழ் அரசியல் கட்சிகளுக்கு வாக்களித்து உள்ளனர்.

இவ்வாறு வாக்களித்ததற்கு தமிழ் அரசியல்வாதிகள் மேற்கொண்ட பிரசாரங்களோ அன்றி பொதுக்கூட்டங்களோ காரணம் அல்ல.

மாறாக, உள்ளூராட்சி சபைகளை தமிழ்த் தரப்புகள் ஆள வேண்டும். இங்கும் தென்பகுதி அரசியல் கட்சிகளுக்கு இடம் கொடுத்து விட்டால், அது தமிழினத்திற்கு அவ்வளவு ஆரோக்கியமாக அமைந்து விடாது என்ற அடிப்படையிலேயே தமிழ் மக்கள் மிகவும் நிதானமாகச் செயற்பட்டுத் தமது வாக்குகளை வழங்கி உள்ளனர்.

இதை நாம் கூறும்போது, தமிழ் மக்கள் எங்களைக் கைவிட்டு விட்டனர். ஆகையால் அவர்கள் விடயத்தில் மிகவும் இறுக்கமாக இருக்க வேண்டும் என்று தேசிய மக்கள் சக்தி நினைத்து விடக்கூடாது.

அதாவது, பொதுத் தேர்தலில் அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்திக்கு வாக்களித்த அதே தமிழ் மக்கள், உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ் அரசியல் கட்சிகளுக்கு வாக்களித்து உள்ளனர்.

இவ்வாறான தீர்மானங்கள் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கு எதிரானதோ அன்றி அநுர அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையீனமோ காரணம் அல்ல.

மாறாக, பொதுத்தேர்தலில் அநுரவின் ஆட்சிக்கு ஆதரவு அளிக்க வேண்டும் எனக் கருதிய தமிழ் மக்கள், உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்த் தரப்புகளே ஆட்சி அமைக்க வேண்டும் என முடிவு செய்தனர்.

அதேவேளை, பொதுத் தேர்தலில் அநுர தப்புக்கு தமிழ் மக்கள் வாக்களித்ததன் மூலம் தமிழ் அரசியல் கட்சி சார்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களின் போக்குகளில் எமக்குத் திருப்தி இல்லை என்பதை உணர்த்துவதும் தமிழ் மக்களின் நிலைப்பாடாக இருந்தது.

ஆக, பொதுத்தேர்தலில் தமிழ்த் தரப்புக்குப் பாடம் புகட்டிய தமிழ் மக்கள் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்த் தரப்புகளுக்கு வாக்களித்துள்ளனர்.

அதாவது, நீங்களும் நாங்களும் வேறல்ல. ஆனால் தமிழ் மக்களின் விடயத்தில் நீங்கள் நேர்மையற்றுப் போவீர்களாக இருந்தால், தமிழர்கள் – தமிழ்க் கட்சி என்றெல்லாம் பார்க்க மாட்டோம். அவர்களுக்கு உரிய பாடம் புகட்டுவோம் என்பதே தமிழ் மக்களின் நிலைப்பாடாகும்.

ஆக, இதை நாம் கூறும்போது உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ் மக்கள் வழங்கிய அருமந்த சந்தர்ப்பத்தை தமிழ்த் தரப்புகள் தமது ஒற்றுமை மூலம் பயன்படுத்தி – பலப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இதை விடுத்து முன்பு போல, மீண்டும் நம்பிக்கையில்லாப் பிரேரணை. மாநகர முதல்வர் பதவி துறப்பு. நகர சபை கலைப்பு என்பதாகச் செய்திகள் இருக்குமாயின், அடுத்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ் மக்கள் தக்கபாடம் புகட்டுவர்.

ஆகவே விருப்பு வெறுப்புகளைக் கடந்து, தமிழ் மக்களின் நன்மை கருதி – தமிழ்த் தேசியத்தின் விடிவு கருதி தமிழ் அரசியல் தரப்புகள் ஒற்றுமைப்பட வேண்டும்.

## கொட்டும் மழையிலும் மாணவிக்கு நீதி கோரி கொட்டாஞ்சேனையில் அறவழிப் போராட்டம்

கொட்டாஞ்சேனையில் அண்மையில் உயிரை மாய்த்த பாடசாலை மாணவிக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்க வலியுறுத்தி நேற்று வியாழக்கிழமை (08) காலை ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பொதுமக்கள், மாணவர்கள், சமூக ஆர்வலர்கள் எனப் பலர் கலந்து கொண்டு மாணவிக்கு நீதிகோரினர்.

கொட்டாஞ்சேனை விவேகானந்தா சந்தியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதையடுத்து ஹின்னி அப்புஹாமி மாவத்தையில் அமைந்துள்ள தனியார் கல்வி நிலையத்திற்கு முன்னாலும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

அத்துடன் கொட்டாஞ்சேனை கல்பொத்த வீதியில் அமைந்துள்ள மாணவியின் வீட்டுக்கு முன்னால் சென்ற ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கு மாணவியின் பெற்றோருக்கு ஆறுதலைத் தெரிவித்ததுடன் மாணவியின் மரணத்திற்குக் காரணமானவர்கள் தண்டனையின் முன்நிறுத்தப்படுவார்கள் என்று தெரிவித்து தங்களது ஆதரவு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்ததுடன் பம்பலப்பிட்டியில் அமைந்துள்ள மாணவி ஆரம்பத்தில் கல்வி பயின்ற பாடசாலைக்கு முன்னாலும் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன் உயிரிழந்த மாணவிக்காக ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் ஈடுபட்டனர்.

இதேவேளை குறித்த ஆர்ப்பாட்டத்தில் பொலிஸார் குவிக்கப்பட்டிருந்ததோடு கலகமடக்கும் பிரிவினரும் வரவழைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## மாணவி விவகாரத்தில் நீதியை நிலை நாட்டுக

### சமூக ஊடகங்களிலும் பலர் கோரிக்கை

(கொழும்பு)

பாடசாலை ஆசிரியரால் பாலியல் துன்புறுத்தலுக்குள்ளான நிலையில் மனவுளைச்சலுக்கு உள்ளாகி உயிர் மாய்த்த மாணவி விவகாரத்தில் உரிய நீதியான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று ஜஸ்டிஸ் போஅம்ஷிகா என்ற காஸ்டாக்கினை சமூக ஊடகங்களில் பலரும் பதிவிட்டு வருகின்றனர்.

இவை தற்சமயம் மில்லியன் கணக்கான பார்வையாளர்களைக் கடந்து இலங்கையளவில் முதன்மை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## மாணவி உயிர்மாய்ப்பு ஆசிரியர் இடமாற்றம்

கொழும்பிலுள்ள பிரபல பாடசாலை ஒன்றில் கல்வி கற்ற 16 வயதுடைய மாணவி ஒருவர் ஆசிரியரால் துஷ்பிரயோகம் செய்யப்பட்ட சம்பவத்தையடுத்து மனவிரக்தி அடைந்த நிலையில் உயிரை மாய்த்துக் கொண்ட சம்பவம் தொடர்பில் சம்பந்தப்பட்ட ஆசிரியரைத் தற்காலிகமாக தற்போது இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதோடு அவரைப் பணிநீக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொள்வதாகக் கொழும்பு வலயக் கல்விப் பணிப்பாளர் பிரேம ரஞ்சித் தேவபந்து உறுதியளித்துள்ளார்.

அதேவேளை இச் சம்பவம் தொடர்பில் பாடசாலையின் அதிபரை கல்வி அமைச்சுக்கு அழைத்து விசாரணை மேற்கொள்ளவுள்ளதாகவும் தெரிவித்தார். (ம-7)

### அடுத்த மாதம் எட்டாம் திகதி

## பிரான்ஸில் களைகட்டவுள்ள யாழ்.பல்கலையின் பொன்விழா

(பாரிஸ்)

பிரான்ஸ் வாழ் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பழைய மாணவர்களின் ஏற்பாட்டில் ஆய்வு அறக்கட்டளையின் அனுசரணையுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொன்விழா நிகழ்வுகள் பிரான்ஸில் எதிர்வரும் ஜூன் மாதம் 8 ஆம் திகதி பிரமாண்டமான முறையில் கொண்டாடுவதற்கான ஒழுங்குகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பிரான்ஸ் தலைநகர், பரிஸின் புறநகரப் பகுதியான Villeneuve Saint-Georges எனும் இடத்தில் உள்ள Espace Shine மண்டபத்திலே இந்தப் பொன்விழா நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

நிகழ்விற்கான நுழைவுச் சீட்டுகளை Jossey: 06 63 30 44 09 இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம் என்றும் நுழைவுச்சீட்டுகள் விற்கப்பட மாட்டாது என்றும் ஏற்பாட்டுக் குழுவினர் சார்பாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு பற்றிய தகவல்களை அறிந்து கொள்ள +33 7 53 50 93 96 என்ற இலக்கத்துடன் WhatsApp மூலமாக அல்லது uojfrance@gmail.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் மூலமாகத் தொடர்பு கொள்ளலாம் என்றும் ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (ம-7)

## தீக்காயங்களுக்குள்ளான பெண்ணொருவர் மரணம்

(மன்னார்)

தனக்கத்தானே தீமூட்டிய நிலையில் தீக்காயங்களுக்குள்ளான இளம் குடும்பப் பெண் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்தார்.

இவ்வாறு உயிரிழந்தவர் மன்னார் மடுவைச் சேர்ந்த தனுஷா குமணன் (வயது - 29) என்ற இரண்டு பிள்ளைகளின் தாய் ஆவார்.

இவர் கடந்த முதலாம் திகதி தனக்குத் தானே தீ மூட்டியதில் தீக்காயங்களுக்குள்ளாகிய நிலையில் முருங்கன் பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே உயிரிழந்துள்ளார்.

மரணம் தொடர்பில் யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மடு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,60)

### நாட்டின் அபிவிருத்தியில்

## உலக வங்கியின் பங்கு மிகக் காத்திரமானது

### அமைச்சர் விஜித ஹேரத்

(கொழும்பு)

இலங்கையின் அபிவிருத்தியை சாத்தியமாக்குவதில் மிகமுக்கிய பங்காளியாக உலக வங்கி திகழ்வதாக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நேற்று முன்தினம் புதன்கிழமை (7) நாட்டுக்கு வருகைதந்திருக்கும் உலக வங்கிக் குழுமத்தின் தலைவர் அஜய் பங்காவுக்கும் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்துக்கும் இடையிலான சந்திப்பு வெளிவிவகார அமைச்சில் இடம்பெற்றது.

இதன் போது கருத்து வெளியிட்ட அமைச்சர் விஜித ஹேரத், இலங்கையின் அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்வதற்கு உலக வங்கி தொடர்ச்சியாக வழங்கிவரும் வலுவான ஒத்துழைப்புக்கு நன்றி தெரிவித்தார்.

அதேவேளை கல்வி, சுற்றுலா, விவசாயம், புதுப்பிக்கத்தக்க சக்திவலு, வர்த்தகம் மற்றும் முதலீடு உள்ளிட்ட முக்கிய துறைகளில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் ஒத்துழைப்பு செயற்திட்டங்கள் மற்றும் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவிருக்கும் திட்டங்கள் குறித்து அமைச்சர் விஜித ஹேரத் உலக வங்கியின் தலைவர் அஜய்பங்காவுக்கு விளக்கமளித்தார். (ம-7)

# ராகு–கேது பெயர்ச்சி பலன்கள்

## 26.04.2025–12.11.2026 வரை



இதுவரை உங்கள் ராசிக்கு 2ஆம் இடத்தில் இருந்து வந்த ராகு பகவான், 26.4.2025 அன்று உங்கள் ராசியிலேயே பிரவேசிக்கப் போகிறார். அதே நேரத்தில் சப்தம ஸ்தானத்திற்கு கேது வருகிறார். சுமார் 11/2 ஆண்டு காலம் ராகுவும், கேதுவும் இந்த இடத்தில் சஞ்சரித்து நட்சத்திர பாதசாரங்களில் பவனி வரும் போது அதற்கேற்ப பலன்களை வழங்குவார்கள்.

## ஜென்மத்தில் ராகு வருகிறார்! திடீர் பயணத்தைத் தருகிறார்!

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

உங்கள் ராசிக்கு 2ஆம் இடமான குடும்ப ஸ்தானத்தில் சஞ்சரித்து வந்த ராகு பகவான், இப்போது ஜென்ம ராசிக்கு மாறுகிறார். எனவே ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல் ஏற்படலாம். உடன்பிறப்புகள் பகையாவர். குடும்பத்தில் குழப்பம் அதிகரிக்கும். கொடுக்கல் வாங்கலில் ஏமாற்றத்தை சந்திப்பீர்கள். தானுண்டு தன் வேலையுண்டு என்று இருக்க வேண்டிய நேரம் இது. சப்தம ஸ்தானத்தில் கேது சஞ்சரிப்பதால் குடும்பத்தில் பிரச்சினை அதிகரிக்கும். கொள்கைப் பிடிப்போடு செயற்பட இயலாது. ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். வீடு மாற்றம், இடமாற்றம் உறுதியாகலாம். வாடகை வீட்டில் இருப்பவர்கள், சொந்த கட்டடத்திற்கு மாறும் முயற்சி கைகூடும். வெளிநாடு செல்லும் முயற்சியும் நடந்தேறும்.

**குரு சாரத்தில் ராகு சஞ்சாரம் (26.4.2025 முதல் 31.10.2025 வரை)**

பூரட்டாதி நட்சத்திரக் காலில் குருவின் சாரத்தில் ராகு பகவான் சஞ்சரிக்கும் பொழுது, பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும். புதிய திருப்பங்கள் ஏற்படும். வெளிநாட்டுப் பணியில் சேரும் ஆசை நிறைவேறும். வியாபாரத்தில் புதிய யுக்திகளை கையாண்டு இலாபத்தை குவிப்பீர்கள். புதிய நண்பர்களால் பொருளாதார நிலை உயரும் வாழ்க்கைத் துணைக்கும், வாரிசுகளுக்கும் நல்ல வேலை அமையும். இளைய சகோதரருடன் இணக்கம் ஏற்படும்.

**சுய சாரத்தில் ராகு சஞ்சாரம் (1.11.2025 முதல் 9.7.2026 வரை)**

சதய நட்சத்திரக் காலில் தனது சுய சாரத்தில் ராகு பகவான் சஞ்சரிக்கும் பொழுது, உடல் நலனில் திடீர் தொல்லை வரலாம். எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது. மனக்குழப்பம் அதிகரிக்கும். இடமாற்றம், வீடு மாற்றம் எதிர்பார்த்தபடி அமையாது. கடன்சுமை கூடும். பயணங்களில் அலைச்சல் இருக்குமே தவிர, ஆதாயம் இருக்காது. முன்கோபத்தின் காரணமாக பல நல்ல வாய்ப்புகளை இழக்க நேரிடும்.

பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிய கவலை அதிகரிக்கும்.

**செவ்வாய் சாரத்தில் ராகு சஞ்சாரம் (10.7.2026 முதல் 12.11.2026 வரை)**

அவிட்ட நட்சத்திரக் காலில் செவ்வாய் சாரத்தில் ராகு பகவான் சஞ்சரிக்கும் பொழுது, சகோதர வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும். தொழில் ரீதியாக எடுத்த புது முயற்சிகளில் அனுகூலம் உண்டு. குடும்பத்தில் இருந்த குழப்பம் அகலும். வருமான உயர்வுக்கான வழி பிறக்கும். அரசியலில் இருப்பவர்களுக்கு பொறுப்புகள் கிடைக்கும். பூமி விற்பனையால் இலாபம் உண்டு. பூர்வீகச் சொத்துக்களை பங்கிட ஆர்வம் காட்டுவீர்கள். கூட்டுத் தொழிலில் இருந்து விலகி தனித்து இயங்க முற்படுவீர்கள். புதிய சொத்து வாங்கும் யோகம் வாய்க்கும். ஆரோக்கியம் சீராகி உற்சாகத்தோடு செயல்படும் நேரம் இது.

**சூரிய சாரத்தில் கேது சஞ்சாரம் (26.4.2025 முதல் 27.6.2025 வரை)**

உத்ரம் நட்சத்திரக் காலில் சூரிய சாரத்தில் கேது சஞ் சரிக்கும் போது, மிகமிகக் கவனமாக செயற்பட வேண்டும். எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது, வருமான பற்றாக்குறையால் வாட்டம் ஏற்படும். எதிரிகளின் தொல்லை அதிகரிக்கும். எதிர் மறை சிந்தனை தலைதூக்கும். கடன் வாங்கும் சூழல் உருவாகும். விலை உயர்ந்த பொருட்களை விற்க நேரிடும். உத்தியோகத்தில் சக பணியாளர்களால் தொல்லை ஏற்படும். திருமணம் கைகூடுவதுபோல் வந்து. கை நழுவிச் செல்லும், வியாபாரப் போட்டி அதிகரிக்கும்.




**சுக்ர சாரத்தில் கேது சஞ்சாரம் (28.6. 2025 முதல் 5.3.2026 வரை)**

பூரம் நட்சத்திரக் காலில் சுக்ர சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, ஆரோக்கியம் சீராகும். அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சியில் ஆதாயம் கிடைக்கும். வீட்டிற்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். வருமானம் உயரும். வருங்காலம் பற்றிய பயம் அகலும் வெளிநாட்டு முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். தந்தை வழி உறவில் இருந்த விரிசல் அகலும். தாயின் உடல்நலம் சீராகும். உத்தியோகத்தில் உங்கள் திறமைக்குரிய அங்கீகாரம் கிடைக்கும். புது வீட்டில் குடியேறும் யோகம் உண்டு. கணவன் - மனைவிக்குள் ஒற்றுமை அதிகரிக்கும்.

**சுய சாரத்தில் கேது சஞ்சாரம் (6.3.2026 முதல் 12.11.2026 வரை)**

மகம் நட்சத்திரக் காலில் சுய சாரத்தில் கேது சஞ்சரிக்கும் பொழுது, குடும்பத்தில் பழைய பிரச்சினைகள் மீண்டும் தலை தூக்கலாம். சொந்தங்கள், சொத்துக்களால் மனக் கவலை அதிகரிக்கும். பிறரை நம்பி ஒப்படைத்த பொறுப்புகள் நடைபெறாமல் போகலாம். எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது. வியாபாரத்தில் வேலையாட்களின் ஆதரவு குறையும், தர்ம சங்கடமான சூழ்நிலை உருவாகும். உத்தியோகத்தில் உயர் அதிகாரியின் கெடுபிடி இருக்கும். பொருளாதார நெருக்கடி அதிகரிக்கும். தன்னம்பிக்கை குறையும், தாழ்வு மனப்பான்மை ஏற்படும்.

**சனிப்பெயர்ச்சிக் காலம்**

6.3.2026 அன்று சனி பகவான், மீன ராசிக்கு பெயர்ச்சியாகி செல்கிறார். அந்த நேரத்தில் ஜென்மச் சனி விலகி, குடும்பச் சனியின் ஆதிக்கம் நடைபெறுகிறது. எனவே குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் ஒன்றின்பின் ஒன்றாக நடைபெறும். வசதி வாய்ப்புகள் பெருகும். நீண்ட நாட்களாக நடைபெற்று வந்த திருமண முயற்சி கைகூடும். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். விலகும் சனியை விரும்பிச் சென்று வழிபட்டு வந்தால், அதிக நன்மைகளைப் பெறலாம்.

**குருப்பெயர்ச்சிக் காலம்**

ராகு - கேது பெயர்ச்சி காலத்தில் குருப்பெயர்ச்சி நிகழ்கிறது. 11.5.2025 அன்று குரு பகவான், மிதுன ராசிக்கு பெயர்ச்சியாகிறார். அவரது பார்வை உங்கள் ராசியில் பதிவது யோகம் தான். தாமதமான காரியங்கள், தடையின்றி நடைபெறும், சேமிப்பு உயரும். உத்தியோகத்தில் சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். முயற்சியால் முன்னேற்றம் காணும் நேரம் இது உயர் அதிகாரிகள் உங்கள் கருத்துக்களை ஏற்றுக் கொள்வர். பொதுவாழ்வில் பெரிய பொறுப்புகள் தேடிவரும். ஒக்டோபர் 8ஆம் திகதி குரு பகவான், அதிசாரமாக கடக ராசிக்கு பெயர்ச்சியாகிறார். இதன் விளைவாக குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறும்

(தொடரும்)

## மின்னல்...

இதில் ஏழாலை கிழக்கைச் சேர்ந்த குணரட்ணம் குமரன் (வயது-39) என்பவரே உயிரிழந்தவராவார்.

இது தொடர்பில் தெல்லிப்பழைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர். (ம-7)

## வயிற்றுக்குத்து...

தனியார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று பின்னர் புதன்கிழமை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் நேற்று வியாழக்கிழமை இரவு குழந்தை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளது.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார்.

மரணத்திற்கான காரணம் கண்டறியப்படாத நிலையில் உடற்கூற்று மாதிரிகள் பகுப்பாய்வுக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ம-7,60)



















## 7 நாட்களேயான...

சிசுக்கள் அண்மையில் யாழ். போதனா வைத்தியசாலையில் பிறந்துள்ளன.

இதில் ஒரு சிசு சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளது. யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு அறிவுறுத்தினார். (ம-7,60)

## வெளியேற்றப்...

தில் நடைபெற்ற விவாதத்தின்போது, நடைமுறை குறித்த கேள்வியை எழுப்பியபோது ஏற்பட்ட சிக்கல் சூழ்நிலை காரணமாக, அவர் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டார்.

சபைக்கு தலைமை தாங்கிய அவைத் தலைவர் அரவிந்த செனரத், அர்ச்சுனா எம்.பியை வெளியேற்ற நடவடிக்கை எடுத்தார்.

அவரைக் கட்டுப்படுத்திக் கொள்ளுமாறு அவைத் தலைவரின் ஆலோசனையைக் கேட்கத் தவறியதற்காக நிலையியற் கட்டளை 71 இன் கீழ் அவர் வெளியேற்றப்பட்டார்.

தவறான நடத்தைக்காக சபையின் எஞ்சிய காலத்திற்கு ஒரு உறுப்பினரை நீக்குவதற்கு நிலையியற் கட்டளைகளில் வழங்கப்பட்டுள்ள விதிகள் குறித்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க அவைத் தலைவருக்கு நினைவூட்டியதைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இதேவேளை கடந்த மார்ச் மாதம் 19ஆம் திகதி அடுத்த 8 அமர்வு நாட்களில் பாராளுமன்ற உறுப்பினர் இராமநாதன் அர்ச்சுனாவினால் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும், கருத்துகள் மற்றும் உரைகளை நேரடியாக ஒலி, ஒளிபரப்பு செய்வதற்கு சபாநாயகரினால் தடை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## சக்கரத்தினுள்...

என்ற நபரே உயிரிழந்தவராவார்.

மேற்படி நபர் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு தனது உழவு இயந்திரத்தின் கீழே இறங்கி நின்றவாறு திறப்பை இயங்கச் செய்துள்ளார்.

இதன்போது கியர் இயக்கத்தில் இருந்த உழவு இயந்திரம் திடீரென இயங்க ஆரம்பித்த நிலையில் குடும்பஸ்தர் கீழே வீழ்ந்ததால் அவர் மீது உழவு இயந்திரத்தின் சக்கரம் ஏறியுள்ளது.

இதில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

இருப்பினும் அவர் ஏற்கெனவே உயிரிழந்துவிட்டார் என்று வைத்தியர்கள் தெரிவித்தனர்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளைத் திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ம-7,33)

## உலக வங்கி...

சந்திப்பு நடைபெற்றுள்ளது.

விவசாயம் மற்றும் அதன் முக்கிய துறைகளை மேம்படுத்த செயற்கை நுண்ண்றிவைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவம் தொடர்பில் உலக வங்கி குழுமத் தலைவர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

புத்தாக்கம் மற்றும் உற்பத்தித் திறனுக்காகச் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்துவதன் சாத்தியப்பாடுகள் குறித்து இலங்கை ஆராய்வதை அவர் ஊக்குவித்ததாக பிரதமர் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## ஜூன் 2க்கு...

வர்களை நியமிக்க அதிகாரபூர்வமாக அறிவிக்கப்படும். கூடுதலாக ஒவ்வொரு உள்ளூராட்சி அமைப்புக்கும் நியமிக்கப்பட வேண்டிய பெண் பிரதிநிதிகளின் எண்ணிக்கை குறித்து அவர்களுக்குத் தெரிவிக்கப்படும்.

மேற்கூறிய ஏற்பாடுகள் முடிந்ததும், உள்ளூராட்சிப் பிரதிநிதிகளின் இறுதிப் பட்டியல் வர்த்தமானி அறிவிப்பில் வெளியிடப்படும்.

உள்ளூராட்சி அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட தொடர்புடைய வர்த்தமானி அறிவிப் பின்படி, உள்ளாட்சி அமைப்புகள் ஜூன் 2 ஆம் திகதி முதல் கூட்டத்தை நடத்த உள்ளன. அதற்கு முன்னர் எங்கள் தரப்பிலிருந்து என்ன செய்ய வேண்டும் என்பதை நாங்கள் முடிவு செய்வோம் என்றார். (ம-7)

## தமி...

பாராளுமன்றத்தில் நேற்று உரையாடும் போதே அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர்மேலும் தெரிவிக்கையில்,

"தமிழரசுக் கட்சி வாக்குகளைப்பெறுவதற்காக கசிப்பு வழங்கினார்கள்.

அத்துடன், மக்களுக்குப் பணத்தையும் வழங்கி தேர்தலில் வெற்றி பெறுவதற்காக இனவாத கருத்துக்களைப் பயன்படுத்தினர்.

அவை கூறுவதற்குத் தகுந்த வார்த்தைகள் அல்ல என்ற காரணத்தினால் நான் அவற்றை இங்கு சுட்டிக் காட்ட விரும்பவில்லை.

நாங்கள் நினைத்திருந்தால் எங்களாலும் பணத்தை வழங்கியிருக்க முடியும். ஆனால், நாங்கள் அதனைச் செய்யவில்லை.

எனினும், தூய்மையான அரசியலைச் செய்து நாங்கள் வவுனியாவிலும் மன்னாரிலும் வெற்றி பெற்றுள்ளோம்" என அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## நல்லூரைச்...

இதில் யாழ்ப்பாணம் நல்லூரைச் சேர்ந்த பாலேந்திரன் முகுந்தன் (வயது-29) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார். நேற்று மாலை கடமை முடித்து ஆற்றில் குளிக்கச் சென்ற சமயம் நீரில் மூழ்கி உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## 267வது...

ரோமன் கத்தோலிக்க திருச்சபையின் 267ஆவது பாப்பரசராக புதிய திருத்தந்தை அமெரிக்க கர்தினால் ரொபர்ட் பிரான்சிஸ் பிரீவோஸ்ட் தெரிவு செய்யப்பட்டுள்ளார். புதிய திருத்தந்தை பதின்நான்காம் போப் லியோ என்று அழைக்கப்படுவார்.

இந்தப் பெயரைக் கொண்ட ஒரு திருத்தந்தை நீண்ட காலத்தின் பின் தெரிவாகியுள்ளார்.

இதனை உறுதிப்படுத்தும் வகையில் வத்திக்கானில் உள்ள சிஸ்டின் தேவாலயத்தின் மேல் பகுதியிலுள்ள குழாயிலிருந்து வெண்மையான புகை நேற்று வெளியேறியது. (ம-7)





















50 ஆண்டுகால சேவையில்

E-Son's
மேன்மை
PARLOUR SERVICE

100 பேர் அமரக்கூடிய விசாலமான மண்டபம்

ஈ – சன்ஸ்

148, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2695 / 077 429 0613
(C-2907)


## வடக்கு...

விக்கையில்,

வடக்கு மாகாணத்தில் யாழ்.மாவட்டத்தில் 3669 ஏக்கர் காணிகள், முல்லைத்தீவு மாவட்டத்தில் 1703 ஏக்கர் காணிகள், கிளிநொச்சி மாவட்டத்தில் 515 ஏக்கர் காணிகள் மற்றும் மன்னார் மாவட்டத்தில் 54 ஏக்கர் காணிகள் என்ற அடிப்படையிலான 5941 ஏக்கர் தனியார் காணிகளை குறிப்பிட்ட காலப்பகுதிகளுக்குள் உறுதிப் பத்திரத்துடன் உறுதிப்படுத்தாவிடின் அவை அரசுடமையாக்கப்படும் என்று குறிப்பிட்டு அரசாங்கம் 2025.03.28 ஆம் திகதியன்று வர்த்தமானி அறிவித்தல் ஒன்றைப் பிரசுரித்துள்ளது.

வடகிழக்கில் தமிழர் தாயகத்தில் வாழும் தமிழர்களின் சனத்தொகைக்கு இணையாக இன்று தமிழர்கள் பல்வேறு நாடுகளில் புலம்பெயர்ந்து வாழ்கிறார்கள்.

உயிரச்சுறுத்தல் காரணமாகவே தமிழர்கள் நாட்டை விட்டு வெளியேறினார்கள்.

நெருக்கடியான நிலையில் தமது சொத்துக்கள் மற்றும் காணிகளை விட்டுச்சென்றார்கள். சட்டவிரோதமாகச் சென்று அகதி அந்தஸ்த்து கோரினார்கள்.

புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் தங்களின் காணிகளை உறுதிப்படுத்திக்கொள்ள முடியாத நிலைமை கணிசமான அளவில் காணப்படுகிறது.

கடந்த அரசாங்கம் புலம்பெயர்ந்தோர் காணிகள் குறித்து விசேட கரிசனை கொண்டு விசேட பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்திருந்தது. இனவாதிகள் என்று குறிப்பிடப்பட்ட கடந்த அரசாங்கம் பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்திருந்தது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை அமுல்படுத்துவதாகக் குறிப்பிட்டுக்கொண்டு ஆட்சிக்கு வந்த அரசாங்கம் அச்சட்டத்தை நீக்காமல் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை அமுல்படுத்துகிறது. புலம்பெயர்ந்த தமிழர்கள் 3 மாத காலத்துக்குள் எவ்வாறு தமது காணிகளின் உரித்தை உறுதிப்படுத்த முடியும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழர்கள் காணிகளை உரிமை கோரவேண்டிய நிலையிலும் அவர்கள் பல தடவைகள் இடம்பெயர்ந்துள்ளார்கள்.

சொத்துக்களையும், உடமைகளையும் விட்டுச் சென்றார்கள். இவ்வாறான நிலையில் குறித்த காணிகளை 3 மாத காலத்துக்குள் எவ்வாறு உறுதிப்படுத்துவது. இது ஏற்றுக்கொள்ள கூடியதொரு விடயமா, காணி தொடர்பான விடயங்கள் தமிழர்களின் இனப்பிரச்சினையின் அடிப்படையான அங்கமாகும் என்பதை முதலில் விளங்கிக்கொள்ள வேண்டும். இதனை இந்த அரசாங்கம் அறியவில்லையா?

இந்த காணிகளின் உறுதிகளை 3 மாத காலத்துக்குள் உறுதிப்படுத்தாவிடின் அவை அரசுடமையாக்கப்படும் என்று ஒரு வர்த்தமானி ஊடாக அறிவித்துள்ளமை நியாயமற்றதொரு விடயமாகப் பார்க்கப்படுவதுடன், இயற்கை நீதிக்கு முரணானதாகவும் கருதப்படும்.

தமிழர்களின் காணிகளை சட்டவிரோதமான முறையில் பலவந்தமாக அபகரித்து அவற்றைக் குடியேற்றங்களுக்காக பயன்படுத்தப் போகிறார்கள் என்பதை பொறுப்புடன் குறிப்பிட்டுக் கொள்கிறேன் என்றார். (ம-7)


வேலையாட்கள் தேவை

முழுநேரம் தங்கி இருந்து சமையல் செய்யக்கூடிய ஆண் வேலை ஆட்கள் உடனடியாகத் தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
076 314 4689
(4129)

வேலைவாய்ப்பு

வல்வெட்டித்துறையில் அமைந்துள்ள Village Hotel & Indian Restaurantற்கு வேலையாட்கள் தேவை
076 830 3931
(4131)

Village Hotel
Bus Booking (A/C Bus)
பருத்தித்துறை → கொழும்பு
யாழ்ப்பாணம் → கொழும்பு
இரு வழிச் சேவை (பகல்/ இரவு)
நெல்லியடி → கொடிகாமம் ஊடாக
www.villagehotel.lk
077 544 8503
(3992)

கனடா - வரி இல்லாமல்
விரைவு பொதிகள் சேவை
5-9 Kg 3970/-
11-16 Kg 2800/-
21-30 Kg 2640/-
நிபந்தனைகளுடன்
குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery
UK 11Kg - 1420/- | France 11Kg - 2220/- | Germany 11Kg - 2020/-
Swiss 11Kg - 2510/- | Australia 11Kg - 1980/- | Italy 11Kg - 2250/-
எமது நேரடி கிளைகள்
கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம் (Metro Branch), சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை
V2 TRAVELS
076 822 6241
076 822 6237
(C-2928)


## மரண அறிவித்தல்

மலர்வு 07 - 10 - 1935



உதிர்வு 06 - 05 - 2025

### சின்னத்தம்பி தர்மலிங்கம்
### (ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)

கந்தரோடை மடத்தடியைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி தர்மலிங்கம் அவர்கள் (06.05.2025) செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - முத்துப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகனும் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை - செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும் காலஞ்சென்ற நாகேஸ்வரி (இராசாத்தி) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து, பாக்கியம், தங்கம்மா, பர்வதம், கந்தசாமி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சுபாஸ்கரன் (ராஜீ - சுவிஸ்), சுகிர்தா, கேதீஸ்வரன் (ஈசன் - சுவிஸ்), விஜிகரன் (விஜி - சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் கேமேஸ்வரி, குகநேசன் (இளைப்பாறிய கட்டடத் திணைக்களப் பொறியியலாளர்), சசிவதனி, ரஜிதா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் ஜனனி - சங்கர், சதீனா, விதுசி, மிதுலா - சங்கீர்த்தன், சகானா, சஜிதன், கிருத்திகா, தர்சனா, சஜித் ஆகியோரின் பாசமிகு பேரனும் அஞ்சனா, ஜானவி ஆகியோரின் பூட்டனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.05.2025) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் காலை 10 மணியளவில் தகனக்கிரியைக்காக வல்லை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.
077 238 9864
021 205 8531
(4120)
தகவல் :
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம் 15 - 11 - 1952



மறைவு 08 - 05 - 2025

### குழந்தைவேலு இராசலிங்கம்
### (பிரபல வர்த்தகர் – வவுனியா)

காரைநகர் பலகாடைப் பிறப்பிடமாகவும் காரைநகர் புதுறோட், இல. 55/2, பழம் வீதி கந்தர்மடம் என்பவற்றை வசிப்பிடமாகவும் கொண்ட குழந்தைவேலு இராசலிங்கம் அவர்கள் நேற்று (08.05.2025) வியாழக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு - தங்கம்மா தம்பதியினரின் கனிஷ்ட புதல்வரும் காலஞ்சென்றவர்களான முத்தையா சுப்பிரமணியம் - செல்லமுத்து தம்பதியினரின் மருமகனும் பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் இராஜினி(அவுஸ்திரேலியா), சண்முகஜோதி(லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கிரிதரன்(அவுஸ்திரேலியா), தர்சினி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம், சிவஞானம், சரஸ்வதி, சவுந்தரம் மற்றும் இராமச்சந்திரன், கமலாதேவி, தவமணிதேவி, இராசலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் வேலாயுதபிள்ளை, திருஞானசம்பந்தர் காலஞ்சென்ற அன்னலெட்சுமி மற்றும் சிவஞாணம், சரஸ்வதி ஆகியோரின் மைத்துனரும் அபினேஷ், அபிநயா, அக்ஷயா, அக்ஷிதன், அக்ஷரா ஆகியோரின் அன்புப் பேரனுமாவர்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் 11.05.2025 ஞாயிற்றுக் கிழமை காலை 7.00 மணிக்கு அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காரைநகர் சாம்பல்ஓடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.55/2, பழம்வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(4136)
தகவல் : குடும்பத்தினர்
மகன் - 077 312 6543

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.05.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.